# தினபூமி

thinaboomi.com

சேலம், ஞாயிறு, பிப்ரவரி 05, 2023 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 8 ₹ 3.00




**உளவு பலூன் சர்ச்சை: சீன பயணத்தை ரத்து செய்தார் அமெரிக்க வெளியுறவுச் செயலர்**

...2-ம் பக்கம்

**கர்நாடக சட்டசபை தேர்தல்: பா.ஜ.க மேலிட இணை பொறுப்பாளராக அண்ணாமலை நியமனம்**

...3-ம் பக்கம்

**பிக் பாஷ் லீக் போட்டி: பிரிஸ்பேனை வீழ்த்தி 5-வது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றிய பெர்த் ஸ்கார்ச்சர்ஸ்பெர்த்**

...7-ம் பக்கம்





● பழனியில் தைப்பூசத்தை முன்னிட்டு நேற்று, தேரோட்டம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

### அர்ப்பணிப்பு உணர்வோடு

# அரசியல் பார்க்காமல் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும்

## புதிய கலெக்டர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை



சென்னை, பிப். 05-

அரசியல் பார்க்காமல் மக்களுக்கு நன்மை செய்யும் வகையில் உங்களது பணி அமைய வேண்டும் என்று கலெக்டர்களுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட கலெக்டர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது,

ஆட்சிப் பொறுப்பேற்று இந்த குறுகிய காலத்திற்குள்ளாக நம்முடைய அரசு சிறப்பான பெயரை பெற்றிருக்கிறது, இதற்கு எந்தவித மறுப்பும் யாரும் சொல்ல முடியாது.

அந்த பெயரைப் பெறுவதற்கு காரணமாக இருந்தவர்கள், ஏதோ தனிப்பட்ட முதலமைச்சரோ, தனிப்பட்ட தலைமைச் செயலாளரோ, தனிப்பட்ட அரசு அதிகாரிகளோ மட்டும் அல்ல, உங்களைப் போன்ற அதிகாரிகளும், அரசு அலுவலர்களும் தான் அதற்கு முழுமையான காரணமாக இருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தேர்தல் அறிக்கையில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறோம்.

அதை நிறைவேற்றித் தருவதற்கான முழு பணியிலும் நீங்கள் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் மக்கள் நலப் பணிகளை செயல்படுத்தி மக்களை கவரக்கூடிய வகையில், ஆங்காங்கு பணியாற்றக் கூடிய அதிகாரிகளை அவர்களுக்கு உரிய பணிகளை விரைந்து முடித்திட உத்தரவிட்டு, அதற்கான பணிகளில் ஈடுபட வேண்டும்.

சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டக்கூடிய வகையில் உங்கள் மாவட்டங்களில் அதை பேணிப் பாதுகாக்க வேண்டும். எந்தவித அரசியல் மாச்சரியங்களுக்கு நீங்கள் இடம் கொடுக்காமல், அரசியல் பார்க்காமல், மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற அந்த உணர்வோடு மட்டுமே உங்களது பணி அமைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விரைவில், மார்ச் மாதம் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்போகிறோம். அப்படி தாக்கல் செய்யப்படுகிற நேரத்தில், ஏற்கனவே அறிவித்திருக்கக்கூடிய திட்டங்கள் எந்த நிலையில் இருக்கிறது என்பதையும் அந்த நிதிநிலை அறிக்கையில் பேசப்படக்கூடிய ஒரு சூழ்நிலை வரும்.

அதையும் மனதில் வைத்துக் கொண்டு அதற்கும் நீங்கள் தகுந்த பதிலை நம்முடைய அரசுக்கு தொடர்ந்து வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

### ஈரோடு கிழக்கு இடைதேர்தல்: பொதுக்குழு உறுப்பினர்களுக்கு

# அ.தி.மு.க. வேட்பாளருக்கான ஒப்புதல் படிவம் விநியோகம்

## இன்று இரவுக்குள் ஒப்படைக்க அவைத்தலைவர் உத்தரவு

சென்னை, பிப். 05-

அ.தி.மு.க. வேட்பாளராக தென்னரசுவை அறிவித்து ஒப்புதல் படிவம் வெளியிட்டு அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன் அறிவித்துள்ளார். இன்று இரவுக்குள் ஒப்புதல் படிவத்தை கட்சியின் தலைமை அலுவலகத்தில் சேர்க்க அவர் உத்தரவிட்டுள்ளார்.

அ.தி.மு.க. பொதுக்குழு தொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்று வருகிறது. இந்த சூழ்நிலையில், ஈரோடு கிழக்கு தொகுதியில் எடப்பாடி பழனிசாமி தரப்பில் வேட்பாளராக தென்னரசு களமிறக்கப்பட்டார். அதே வேளை, எடப்பாடி பழனிசாமி தரப்பில் அவரது கையெழுத்தை தேர்தல் ஆணையம் அங்கீகரித்து இரட்டை இலை சின்னத்தை ஒதுக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டில் இடையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவை நேற்று முன்தினம் விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர் குறித்து பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். வேட்பாளரை இறுதி செய்ய பொதுக் குழுவில் ஓட்டெடுப்பு நடத்த வேண்டும்.

ஓ.பன்னீர் செல்வம் மற்றும் 3 உறுப்பினர்கள் ஓட்டு போட அனுமதி அளிக்கப்படுகிறது. பொதுக்குழு முடிவினை தேர்தல் கமிஷனிடம் அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன் தெரிவிக்க வேண்டும்.

அதை தேர்தல் கமிஷன் ஏற்க வேண்டும். இந்த உத்தரவு இடைத் தேர்தலுக்கு மட்டுமே பொருந்தும்.

இந்த இடைக்கால ஏற்பாடு, ஏற்கனவே ஒத்தி வைக்கப்பட்டுள்ள தீர்ப்பில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு உரிமை அளிக்கவில்லை என்பதையும், அவர்களின் உரிமை பறிக்கப்படவில்லை என்பதையும் தெளிவுபடுத்துகிறோம் என்று சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது.

இந்நிலையில், ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளராக தென்னரசுவை அறிவித்து ஒப்புதல் படிவத்தை கட்சியின் அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அதில் அ.தி.மு.க. சார்பில் நிறுத்தப்பட்டுள்ள வேட்பாளர் தென்னரசுக்கு ஆதரவு அளிக்க படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் வெளியிட்ட அறிக்கையில்,

ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் அ.தி.மு.க. அதிகாரப்பூர்வ வேட்பாளரை பொதுக்குழு உறுபினர்கள் சுற்றறிக்கை மூலம் தேர்வு செய்வதற்கு சுப்ரீம் கோர்ட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

அதன்படி பொதுக் குழு உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப் பட்டுள்ளது.

பொதுக்குழு உறுப்பினர்கள் சுற்றறிக்கையை முறையாக பூர்த்தி செய்து இன்று இரவு 7 மணிக்குள் அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் என்னிடம் சேர்ந்து விடுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# ஈரோடு இடைத்தேர்தலில் பா.ஜ.க. போட்டியிடாது

## அண்ணாமலை திட்டவட்டம்

சென்னை, பிப். 05-

அ.தி.மு.க. உட்கட்சி விவகாரத்தில் பா.ஜ.க. தலையிடாது என்றும், இடைத்தேர்தலில் பா.ஜ.க. சார்பாக வேட்பாளரை நிறுத்தப் போவதில்லை என்றும் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது,

அ.தி.மு.க. சார்பில் ஒரே வேட்பாளர் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்பது தான் பா.ஜ.க.வின் விருப்பம். வெற்றி வாய்ப்பை பெற இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்பது அவசியம். பிரிந்து தேர்தலை சந்தித்தால் வெற்றி வாய்ப்பு குறைய வாய்ப்புள்ளது.

அ.தி.மு.க.வின் உட்கட்சி பிரச்சினையில் தலையிடக் கூடாது என்பதே பா.ஜ.க.வின் நோக்கம். ஓ. பன்னீர் செல்வம், எடப்பாடி பழனிசாமி இரு தரப்புக்கும் சண்டையை மூட்டி குளிர்காய மாட்டோம். வேட்பாளர் கே.எஸ். தென்னரசை ஆதரிக்க வேண்டும் என ஓ. பன்னீர் செல்வத்திடம் வலியுறுத்தினோம். அவர் சில கோரிக்கைகளை முன்வைத்தார்.

ஓ. பன்னீர் செல்வம் தனது வேட்பாளரை வாபஸ் பெற வேண்டும் என்பதே எங்களது கோரிக்கை. வேட்பாளர் தேர்வில் ஓ. பன்னீர் செல்வம் நல்ல முடிவை எடுப்பார்.

பழனிசாமி தரப்பு வேட்பாளர் அந்த தொகுதிக்கு ஏற்கனவே பரிச்சயமானவர். இருமுறை எம்.எல்.ஏ.வாக தேர்வானவர். தேர்தல் அறிவித்தவுடன் பா.ஜ.க. போட்டியிடாது என இரண்டு தலைவர்களிடம் தெரிவித்து விட்டோம். இடைத் தேர்தலில் பா.ஜ.க. சார்பாக வேட்பாளரை நிறுத்தப் போவதில்லை. சுயேச்சை வேட்பாளருக்கு பா.ஜ.க. ஒருபோதும் ஆதரவு அளிக்காது. இன்னும் 3 நாட்களே உள்ள நிலையில், நல்ல முடிவு வரும் என எதிர்பார்க்கிறோம் என்று அவர் தெரிவித்தார்.

# சவரனுக்கு ரூ.640 குறைந்தது ஆபரண தங்கம் விலை

சென்னை, பிப். 05-

மத்திய பட்ஜெட்டில், தங்கம், வெள்ளி பொருட்களுக்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டு உள்ளது. இதன் காரணமாக தங்கம் விலை புதிய உச்சம் தொட்டு வரலாறு காணாத வகையில் உயர்ந்தது. ஒரு பவுன் தங்கம் ரூ. 44 ஆயிரத்தை தாண்டியது. அதாவது பவுன் ரூ.44 ஆயிரத்து 40-க்கும், ஒரு கிராம் ரூ.5,505-க்கும் விற்பனையானது. வெள்ளி விலையும் ஒரு கிராம் ரூ.77.80 ஆக உயர்ந்து புதிய உச்சம் தொட்டது. இதனால், இல்லத்தரசிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்த நிலையில், சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) கிராமுக்கு ரூ.65 குறைந்து ஒரு கிராம் ரூ. 5,440-க்கு விற்பனை செய்யப்பட்டது. இதே போன்று 22 காரட் ஆபரணத் தங்கம் விலை சவரனுக்கு ரூ.520 குறைந்து ஒரு சவரன் ரூ. 43,520 விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிராம் வெள்ளி ரூ.1.40 குறைந்து ரூ.76.40-க்கு விற்பனை செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்றும் தங்கத்தின் விலை குறைந்துள்ளது. அதாவது சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 640 குறைந்து 42,680 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. 22 காரட் ஆபரண தங்கம் கிராமுக்கு ரூ. 80 குறைந்து ரூ. 5335-க்கு விற்பனை செய்யப்பட்டது.

# இடைத்தேர்தலில் இரட்டை இலை சின்னம் வெற்றி பெற பாடுபடுவோம்

## ஓ.பன்னீர் செல்வம் அறிக்கை

சென்னை, பிப். 05-

இடைத்தேர்தலில் இரட்டை இலை சின்னம் வெற்றிபெற நானும், தொண்டர்களும் பாடுபடுவோம் என ஓ.பன்னீர் செல்வம் கூறியுள்ளார்.

இது குறித்து முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பை பொறுத்தவரை இந்த இடைத்தேர்தலில் எந்தெந்த கோரிக்கைகளை மக்கள் முன், நாம் எடுத்து சொன்னோமோ அவற்றை எல்லாம் நிறைவேற்றும் வகையில் அமைந்துள்ளது. எதிர்வரும் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் ஒற்றுமையாக போட்டியிட வேண்டும் என்றும் ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் அதற்கு கையெழுத்திட தயார் என்றும் அறிவித்தேன்.

அதற்கேற்ப சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின் மூலம் ஒற்றுமையாக போட்டியிடும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் இரட்டை இலை சின்னம் முடக்கப்படுவதற்கு நான் காரணமாக இருக்க மாட்டேன் என்று கூறியிருந்தேன்.

அதே போல், இரட்டை இலை சின்னத்தின் மூலம் அ.தி.மு.க. போட்டியிடுகிற வாய்ப்பு சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின் மூலம் பொது வேட்பாளரை நிறுத்த நான் கையெழுத்திட தயார் என்று அறிவித்தேன்.

என்னை ஒருங்கிணைப்பாளர் என்று மட்டும் அல்ல, கட்சியிலேயே இல்லை என்று எடப்பாடி பழனிசாமி தரப்பினர் பகை உணர்வோடு கூறி வந்தனர். இந்நிலையில் என்னையும், என்னை சார்ந்தவர்களையும் உள்ளடக்கி எங்கள் கருத்துக்களை கேட்டறிந்த பின்னர்தான், பொது வேட்பாளரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு எங்களை எதிர்த்தோருக்கு சரியான பாடமாக அமைந்துள்ளது.

அ.தி.மு.க.வின் அடிப்படை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருங்கிணைப்பாளர் என்கிற என்னுடைய பொறுப்பு நீடிப்பதற்கு எவ்வித தடையும் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின் மூலம் விதிக்கப்படவில்லை. ஆனால், அதே நேரத்தில் சச்சரவுக்கு உள்ளான பொதுக்குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட்ட இடைக்கால பொதுச்செயலாளர் என்ற பொறுப்பில் நியமிக்கப்பட்ட எடப்பாடி பழனிசாமி பொறுப்பை சுப்ரீம் கோர்ட்டும், தேர்தல் ஆணையமும் அங்கீகரிக்கவில்லை.

இந்த இடைத்தேர்தலை பொறுத்தவரை இரட்டை இலை சின்னம் வெற்றி பெற நானும் என்மீது பற்றுக் கொண்ட தொண்டர்களும் மற்றும் என்மீது நம்பிக்கை கொண்ட பொதுமக்களும் பாடுபடுவோம். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஓ.பன்னீர்செல்லம் தரப்பில் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட செந்தில்முருகன் வேட்புமனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த நிலையில் அவரை கட்சியின் அமைப்பு செயலாளராக நியமித்து உள்ளதாக ஓ.பன்னீர் செல்வம் அறிவித்துள்ளார்.

### இன்று முதல் 7-ம் தேதி வரை

# தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும்


சென்னை, பிப். 05-

குமரிக்கடல், மன்னார் வளைகுடா பகுதியில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவிழந்ததாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்று முதல் 7-ம் தேதி வரை தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்காலில் வறண்ட வானிலையே நிலவக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மன்னார் வளைகுடா பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவிழந்தது. இதன் காரணமாக இன்று 05.02.2023 முதல் 07.02.2023 வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

வரும் 08-ம் தேதி தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 31-32 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23-24 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும். இவ்வாறு வானிலை மையம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.


## மார்க்கெட் விலை நிலவரம்



| | BSE | NSE |
|---|---|---|
| | 909.64 | 243.65 |
| பாயிண்ட் | 60841.88 | 17854.05 |



**தங்கம்**
1 சவரன் ₹42,680
1 கிராம் ₹5,335



**வெள்ளி**
1 கிலோ ₹74,200
1 கிராம் ₹74.20

**டாலர்** ₹82.23

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

# 2-ம் எலிசபெத்தை கொல்ல முயற்சித்த வழக்கு: இந்திய வம்சாவளி நபர் ஒப்புதல் வாக்குமூலம்

**லண்டன், பிப். 05-**



இங்கிலாந்து நாட்டில் 2-ம் எலிசபெத் ராணியை கொல்ல முயற்சித்த வழக்கில் இந்திய வம்சாவளி நபர் போலீசில் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்து உள்ளார்.

இங்கிலாந்து நாட்டில் நீண்டகால ராணியாக பதவி வகித்தவர் என்ற பெருமை வகித்தவர் 2-ம் எலிசபெத். கடந்த 2022-ம் ஆண்டு செப்டம்பர் 8-ம் தேதி தனது 94-வது வயதில் உடல்நல குறைவால் காலமானார்.

இந்நிலையில், 2021-ம் ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தன்று ராணியை கொல்வதற்காக அரச இல்லத்திற்குள் ஒருவர் புகுந்துள்ளார். அவரை அதிகாரிகள் தடுத்து நிறுத்தி உள்ளனர். அவரிடம் விசாரணை நடத்தியதில் அவர், இந்திய வம்சாவளியான ஜஸ்வந்த் சிங் சைல் என தெரிய வந்தது.

சம்பவம் நடந்தபோது அவருக்கு வயது 19. விசாரணையில், ராணியை கொலை செய்யும் நோக்கத்துடன் வந்தேன் என அவர் ஒப்புக் கொண்டுள்ளார். இதற்காக அவர், தன்னுடன் வில் அம்பு வடிவிலான ஆயுதம் ஒன்றை ஏந்தி சென்றுள்ளார். அவர் எதற்காக ராணியை கொல்ல சென்றார் என்று விசாரிக்கப்பட்டது.

அவருக்கு மனநல சிகிச்சையும் அளிப்பதற்காக பிராட்மூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் மருத்துவமனையில் இருந்த படி வீடியோ இணைப்பு வழியே லண்டன் நகரின் ஓல்டு பெய்லி கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அதில், நடந்த குற்ற சம்பவங்களை சிங் ஒப்புக் கொண்டுள்ளார். இந்த தாக்குதல் முயற்சி சம்பவத்திற்கு முன்பு, ஜஸ்வந்த் சிங் பலருக்கும் வீடியோ ஒன்றை அனுப்பி உள்ளார்.

அதில், இந்தியாவில் 1919-ம் ஆண்டு நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலையில் கொல்லப்பட்ட அனைத்து இந்தியர்களுக்காகவும், பழி வாங்குவதற்காக சிங் இந்த செயலில் ஈடுபட்டு உள்ளார் என தெரிய வந்து உள்ளது. 1842-ம் ஆண்டு தேச துரோக சட்டத்தின் கீழ் சிங் மீது குற்றச்சாட்டு பதிவாகி உள்ளது.

### சுற்றுலா பயணிகளை ஈர்க்க

# 5 லட்சம் பேருக்கு இலவச விமான டிக்கெட்டுகள்: ஹாங்காங் முடிவு

**ஹாங்காங், பிப். 05-**

கொரானாவிற்கு பிறகு உலகம் முழுவதும் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதால் சுற்றுலாவாசிகளை ஈர்க்கும் விதமாக 5 லட்சம் பேருக்கு இலவச விமான டிக்கெட்டுகளை வழங்க உள்ளதாக ஹாங்காங் அறிவித்துள்ளது.

ஹாங்காங்கில் இயற்கை எழிலுடன் கண்ணை கவரும் சுற்றுலா தளங்களை காண ஆண்டுதோறும் லட்சக்கணக்கான மக்கள் வந்து செல்வது வழக்கம். ஆனால் கொரோனா பரவலுக்கு பிறகு ஹாங்காங் செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்தது. தற்போது உலக நாடுகள் பயண கட்டுப்பாடுகளை தளர்த்த இருப்பதால் சுற்றுலா துறையை மீட்டெடுப்பதற்கான முயற்சியில் ஹாங்காங் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே சுற்றுலா பயணிகள் வரத் தொடங்கி இருக்கும் ஹாங்காங்கில் சுற்றுலா வணிகத்தை பெருக்க புதிதாக 5 லட்சம் பேருக்கு இலவச விமான டிக்கெட்டுகளை வழங்கவுள்ளதாக ஹாங்காங் அரசு அறிவித்திருக்கிறது.

இந்த டிக்கெட்டுகள் காத்திக் பசுபிக் ஏர்வேஸ், ஹாங்காங் எக்ஸ்பிரஸ் மற்றும் ஹாங்காங் ஏர்லைன்ஸ் விமானங்கள் வாயிலாக வருகிற மார்ச் மாதம் முதல் படிப்படியாக வழங்கப்பட உள்ளது.

இதற்கிடையே நாளை 6-ம் தேதி முதல் ஹாங்காங் உடனான எல்லைகளை திறப்பதாக சீனா அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# கடனை திருப்பி செலுத்துவதில் இலங்கைக்கு விலக்கு: சீனா உறுதி

**பெய்ஜிங், பிப். 05-**



கடன்களை திருப்பி செலுத்த இலங்கைக்கு சலுகை அளிக்க தயாராக உள்ளதாக சீனா உறுதி அளித்துள்ளது.

கடும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள இலங்கையின் மொத்த வெளிநாட்டு கடன் தொகை ரூ. 4.19 லட்சம் கோடியாகும். பொருளாதார சிக்கலில் உள்ள இலங்கைக்கு இந்தியா ரூ. 36 ஆயிரம் கோடி அவசர கால கடன் உதவி அளித்துள்ளது.

வெளிநாட்டு கடன்களில் ஜப்பான், ஆசிய வளர்ச்சி வங்கிக்கு அடுத்தபடியாக சீனா மூன்றாம் இடத்தில் உள்ளது. சீனாவுக்கு இலங்கை கொடுக்க வேண்டிய கடன் தொகை இதில் 10 சதவீதமாகும். சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு ரூ.23 ஆயிரத்து 829 கோடி அவசர கால கடன் அளிக்க சம்மதம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் பெறுவதற்கு கடன் மறுசீரமைப்பு பணிகளை இலங்கை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், கடந்த 2022 மற்றும் 2023-ம் ஆண்டுகளுக்கு வங்கி கடனை திருப்பி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கும் திட்டத்துக்கு சீன அரசாங்கம் தயாராக இருப்பதாக அந்நாட்டின் வெளியுறவு துறை செய்தி தொடர்பாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார்.

### உளவு பலூன் சர்ச்சை:

# சீன பயணத்தை ரத்து செய்தார் அமெரிக்க வெளியுறவுச் செயலர்

**வாஷிங்டன், பிப். 05-**



அமெரிக்காவின் மோண்டானாவில் உள்ள அணுசக்தி எவுதளத்தில் சீனாவின் உளவு பலூன் பறந்த விவகாரத்தை அடுத்து அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஆண்டனி ப்ளின்கன் தனது சீன பயணத்தை ரத்து செய்துள்ளார்.

சீன உளவு பலூன் பறக்க விடப்பட்டது அமெரிக்க இறையாண்மைக்கு எதிரான திட்டமிட்ட தெளிவான அத்துமீறல் என்று அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இந்த உளவு பலூன் 3 பெரிய பேருந்துகளை ஒன்றாக சேர்த்தது போன்ற அளவுக்குப் பெரியது என்று அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

முன்னதாக இது குறித்து அதிகாரிகள், அமெரிக்காவின் மோண்டானாவில் உள்ள அணுசக்தி எவுதளத்தில் சீனாவின் உளவு பலூன் ஒன்று பறந்து வருவதைக் கண்டோம். நிச்சயம் அது ரகசியமான தகவல்களை சேகரிப்பதற்காக வந்ததாக நாங்கள் நம்புகிறோம். மக்களின் பாதுகாப்புக்காக அந்த பலுனை நாங்கள் சுடவில்லை. பலுனை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம் என்று தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

மேலும், மோண்டானாவில் காணப்பட்ட உளவு பலூன் போல் லத்தீன் அமெரிக்காவிலும் ஒரு உளவு பலூனை பார்த்ததாக பென்டகன் தெரிவித்துள்ளது. இந்நிலையில், சீனாவோ அது உளவு பலூன் அல்ல வானிலை ஆய்வுக்காக அறிவியல் காரணங்களுக்காக தாங்கள் அனுப்பிய விண்ஓடம் தவறுதலாக திசை மாறி அமெரிக்க வான்வழிக்குள் வந்து விட்டது என்று தெரிவித்தது. ஆனால் இந்த விளக்கத்தை ஏற்பதாக இல்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

### திணை உணவுகளையும் செய்து பாருங்கள்:

# ரொட்டி சமைத்த பில்கேட்ஸ்க்கு பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு

**வாஷிங்டன், பிப். 05-**


ரொட்டி சமைத்த வீடியோ வெளியிட்ட பில்கேட்ஸ்க்கு பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார். மேலும் திணை உணவுகளையும் சமைத்து பார்க்க அவர் அறிவுறுத்தியுள்ளார்.

உலக கோட்டீஸ்வரரும், மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் இணை நிறுவனரான பில்கேட்ஸ் தான் ரொட்டி சமைக்கும் வீடியோ ஒன்றை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்திருந்தார்.

அந்த வீடியோவில், செப் ஒருவர் தான் இந்தியா சென்று வந்ததாகவும், அங்கு பிரபலமான ரொட்டியை (சப்பாத்தி) சமைக்கும் முறையை பில்கேட்ஸூக்கு கற்றுக் கொடுக்கிறார். மாவு பிசைந்து, உருண்டை பிடித்து வட்டமாக தேய்த்து சப்பாத்தி சுடுவதை பின்பற்றி, பில்கேட்ஸ் ரொட்டி சுட்டார். இந்த வீடியோ வைரலானது.

பில்கேட்ஸின் சமையலுக்கு பிரதமர் மோடி டுவிட்டரில் பாராட்டு தெரிவித்துள்ளார். மேலும், இந்தியாவில் ஆரோக்கியமான உணவுகளின் ஒன்று திணை. இந்தியாவில் பல தினை உணவுகள் உள்ளன. அவற்றையும் நீங்கள் செய்து பார்க்கலாம் என்று அதில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

# கூகுளில் மீண்டும் உலா வரும் அமெரிக்க நடிகையின் படங்கள்



**வாஷிங்டன், பிப். 05-**

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல நடிகை ஜெனீபர் லோபஸ். இவர் இசை பதிவு தயாரிப்பாளர், நடன கலைஞர், பின்னணி பாடகி என்று பன்முக தன்மை கொண்டவர். இவர் கடந்த 2000-ம் ஆண்டின் போது கிராமி இசை விருது நிகழ்ச்சியில் விருது பெற பங்கேற்றார்.

அப்போது அவர் பச்சை நிறத்தில் கவர்ச்சியான ஆடை ஒன்றை அணிந்து வந்திருந்தார். அந்த ஆடை உலகம் முழுக்க மிகுந்த வரவேற்பை பெற்றது. கூகுள் தேடலில் கடந்த 20 ஆண்டுகளாக அந்த படம் தொடர்ந்து அதிகம் பேரால் பார்க்கப்பட்டு வருகிறது. இணைய தள உலகில் அவரது படம் புதிய புரட்சியை ஏற்படுத்தி இருப்பதாக நிபுணர்கள் கருதுகிறார்கள்.

கிராமி விருதுகள் விரைவில் மீண்டும் நடைபெற உள்ள நிலையில் தற்போது ஜெனீபர் லோபஸ்சின் படங்கள் மீண்டும் உலா வர தொடங்கி உள்ளன.

## 05-02-2023




**மேஷம்:-** அனைவரையும் சந்தேகக் கண்ணோடு பார்க்க நேரும். தாயின் ஆரோக்கியத்தில் தனிக் கவனம் செலுத்த வேண்டிய நாள். பயமின்றி முழு முயற்சி செய்து முன்னேறுங்கள்.

**ரிஷபம்:-** எதிலும் வெற்றிக் கனியைப் பறிப்பார்கள். வாக்குவன்மையால் வருமானம் அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு, கல்வியில் தேர்ச்சி போன்ற நற்பலன்களை எதிர்பார்க்கலாம்.

**மிதுனம்:-** எதிர்பார்த்த பணவரவுகள் தாமதப்படும். உறவுகளோடு வீண் வாதங்கள் தவிர்த்தால் இல்லத்தில் அமைதி நிலவும். காரியங்கள் கைகூட கடின உழைப்பு தேவை.

**கடகம்:-** தொழில், வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். இனிய பேச்சால் எல்லோரையும் கவர்ந்திடுவீர்கள். பல வழிகளிலும் வருமானங்கள் சீராக உயரும். அரசியல் ஆதாயங்கள் ஏற்படும்.

**சிம்மம்:-** தொழில் முதலீடுகளை குறைப்பது நல்லது. தீய வழிகளில் தேவையற்ற செலவுகளை செய்ய வேண்டியது வரும். சிலருக்கு இடமாற்றமும், பணமுடையும் ஏற்படலாம்.

**கன்னி:-** எல்லா விதத்திலும் ஏற்றம் தரும் நாள். உங்கள் தனித் திறமைகளை வெளிப்படுத்தி பணிபுரியும் இடத்தில் பாராட்டை பெறுவீர்கள். குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும்.

**துலாம்:-** உங்கள் தீவிர முயற்சியால் தனவரவு அதிகரிக்கும். அரசு உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபங்கள் ஏற்படும். நேர்மையுடன் தொழில் செய்தால் அதிக இலாபம் காணலாம்.

**விருச்சிகம்:-** தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும். புத்திர பாக்கியம் ஏற்படும். இறையருளால், வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**தனுசு:-** கோபத்தைக் குறைத்து, நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். மனைவியின் கலகத்தால், வீட்டில் குழப்பங்கள் உண்டாகும். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் முன்னேற்றம் உண்டு.

**மகரம்:-** எதிர்பார்ப்புக்கும் மேலாக அதிக தனவரவு இருக்கும். மனதில் மகிழ்ச்சியும் தெம்பும் அதிகரிக்கும். இனிய பேச்சால் எதிரியையும் வசமாக்குவர். வாகன யோகமும், சிறு தூரப் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**கும்பம்:-** விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். எல்லா வளமும் பெருகும். இனிய சுற்றுலாப் பயணங்களால் இன்பம் பெருகும். பெண்ணின் சிநேகமும், தனக்கெனத் தனி வீடு அமையும்.

**மீனம்:-** மனச் சோர்வும், உடல் சோர்வு ஏற்படும். பயணங்களில் தடைகள் ஏற்படும். தேவையற்ற செலவுகள் ஏற்படும். என்னதான் கடினமாக உழைத்தாலும் நல்ல பெயர் எடுக்க முடியாது.

# பழனியில் தைப்பூச தேரோட்ட திருவிழா விண்ணை பிளந்த அரோகரா முழக்கம்

**பழனி, பிப். 05-**

பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவிலில் ஜனவரி மாதம் 29-ம் தேதி தைப்பூச திருவிழா தொடங்கி வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது. விழாவின் சிகர நிகழ்வான தைப்பூச தேரோட்டம் நேற்று நடைபெற்றது.

நேற்று அதிகாலை வள்ளி-தெய்வானையுடன் முத்துக்குமாரசாமி சண்முகாநதிக்கு எழுந்தருளி தீர்த்தம் கொடுத்தல் நடைபெற்றது. மதியம் சுவாமி திருத்தேரில் எழுந்தருளும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைதொடர்ந்து மாலையில் தேரோட்டம் தொடங்கியது.

பெரியநாயகி அம்மன் கோவிலில் இருந்து புறப்பட்ட திருத்தேர் ரத வீதியில் வலம் வந்தது. ஏராளமான பக்தர்கள் திருத்தேரை வடம் பிடித்து இழுத்து திருத்தேரில் வீற்றிருந்த முருகனை தரிசனம் செய்தனர்.

பக்தர்களின் அரோகரா... அரோகரா. முழக்கம் விண்ணை பிளந்தது. தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் இருந்து பழனிக்கு லட்சக்கணக்கான பக்தர்கள் பாத யாத்திரையாக வந்து தேர்த் திருவிழாவில் பங்கேற்று முருகனை வழிபட்டனர்.

பக்தர்கள் மலைக்கோவில், அடிவாரம் உள்ளிட்ட பகுதிகளில் திரண்டு இருந்ததால் எங்கு திரும்பினாலும் மக்கள் தலைகளாக காட்சியளித்தது.

ஏராளமான பக்தர்கள் பால்குடம் எடுத்தும் காவடி எடுத்தும் நேர்த்திக்கடன் செலுத்தினர். பக்தர்களின் வசதிக்காக கிரிவல பாதையில் பல்வேறு இடங்களில் தற்காலிக குடில்கள் அமைக்கப்பட்டு இருந்தன.

பக்தர்கள் பாதுகாப்புக்காக டி.ஐ.ஜி தலைமையில் 3000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர். பக்தர்கள் வரும் வாகனங்களை நிறுத்த தற்காலிக பஸ் நிலையம் ஏற்படுத்தப்பட்டு இருந்தது.

# பாடகி வாணி ஜெயராம் மறைவு முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல்

**சென்னை, பிப். 05-**

பிரபல பாடகி வாணி ஜெயராம் மறைவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

இந்தியத் திரையுலகின் புகழ்பெற்ற இசைக்குயிலாக விளங்கிய பின்னணிப் பாடகி, கலைவாணி என்ற வாணிஜெயராம் மறைவுற்ற செய்தி அறிந்து மிகவும் வருந்தினேன்.

தமிழ்நாட்டின் வேலூரில் பிறந்து உலகம் முழுக்க தமது இன்னிசையின் இனிமையால் புகழ் பெற்றவர். தமிழ் உட்பட 19 மொழிகளில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அழியாப் புகழ்பெற்ற பாடல்களைப் பாடி, ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பெற்றவர்.

அண்மையில் அவருக்கு பத்மபூஷண் விருது அறிவிக்கப்பட்ட போது எனது வாழ்த்துகளைத் தெரிவித்திருந்தேன். அறிவிக்கப்பட்ட விருதைப் பெறும் முன்னரே அவர் இவ்வுலகை விட்டுப் பிரிந்து செல்ல நேர்ந்தது பெரும் துயரை அளிக்கும் செய்தியாகும்.

பழம்பெரும் பின்னணிப் பாடகியான வாணிஜெயராமின் மறைவு, இசையுலகைப் பொறுத்தவரை ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். வாணிஜெயராமை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

### ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்:

# 5 நாட்களில் 46 பேர் வேட்புமனு தாக்கல்

**ஈரோடு, பிப். 05-**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைதேர்தலில் 5-வது நாளான நேற்று வரை 46 பேர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வேட்பு மனு தாக்கல் கடந்த 31-ம் தேதி தொடங்கியது. ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் அரசியல் கட்சியினர் காலை 11 மணி முதல் மதியம் 3 மணி வரை வேட்பு மனு தாக்கல் செய்து வருகின்றனர்.

முதல் நாளில் சுயேட்சைகள் பலர் ஆர்வத்துடன் வேட்பு மனு தாக்கல் செய்ய வந்தனர். முதல் நாளில் 4 சுயேட்சைகள் மனு ஏற்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2-வது நாளில் தே.மு.தி.க வேட்பாளர் ஆனந்த் உள்பட 6 பேரின் வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 3-வது நாளாக நடந்த வேட்பு மனு தாக்கலில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மேனகா நவநீதன் உள்பட 10 பேரின் வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டன. இந்நிலையில் நேற்று முன்தினம் 4-வது நாளாக வேட்பு மனு தாக்கல் தொடர்ந்து நடந்தது. காங்கிரஸ் வேட்பாளர் இளங்கோவன், அ.ம.மு.க வேட்பாளர் சிவ பிரசாந்த், ஓ.பன்னீர் செல்வம் அணி வேட்பாளர் செந்தில் முருகன் உள்பட ஒரே நாளில் அதிகபட்சமாக 16 பேர் வேட்பு மனு தாக்கல் செய்தனர். கடந்த 4 நாட்களாக நடந்த வேட்பு மனு தாக்கலில் 36 பேர் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று 5-வது நாளாக வேட்பு மனு தாக்கல் நடைபெற்றது. நேற்று சில சுயேட்சைகள் வேட்பு மனு தாக்கல் செய்தனர். அந்த வகையில் 5 நாட்கள் வேட்புமனு தாக்கல் நிலையில் மொத்தம் 46 பேர் ஈரோடு இடைத்தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

இன்று (ஞாயிற்றுக்கிழமை) வேட்புமனு தாக்கல் செய்யப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து வரும் 6-ம் தேதி மற்றும் 7-ம் தேதி வேட்பு மனு தாக்கல் நடைபெறும்.

7-ம் தேதி வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாளாகும். அதன் பின்னர் 8-ம் தேதி வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறுகிறது. 10-ம் தேதி வேட்பு மனுக்கள் திரும்ப பெற கடைசி நாள். அன்று மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டு சின்னங்கள் ஒதுக்கப்படும்.

### கனமழையால் பாதிக்கப்பட்ட டெல்டா

# விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க எடப்பாடி கோரிக்கை

**சென்னை, பிப். 05-**



கனமழையால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கடந்த சில நாட்களாக தஞ்சை, திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் போன்ற டெல்டா மாவட்டங்களில் கனமழை பெய்தது. இதனால் சுமார் இரண்டு லட்சம் ஏக்கரில் பயிரிட்டு அறுவடைக்கு காத்திருக்கும் நெற்கதிர்களும், ஊடு பயிராக பயிரிடப்பட்டிருந்த உளுந்து போன்ற பயிர்களும் மழையில் நனைந்து வீணாகியுள்ளது.

மேலும், அறுவடை செய்து, நேரடி நெல்கொள்முதல் நிலையங்களுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படும் நிலையில் வைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகளும் மழையில் நனைந்து வீணாகியுள்ளன.

மழை நீரில் அழுகிய, அறுவடைக்குத் தயாராக இருந்த நெல் பயிர்களை கணக்கெடுக்க உடனடியாக அதிகாரிகளை அனுப்பி கணக்கெடுத்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணத்தை அறிவிக்க வேண்டும்.

நெல் பயிரிட்ட ஒரு ஏக்கர் நிலத்திற்கு குறைந்த பட்சம் 30 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும். எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும்.

மேலும், கடலோர மாவட்டங்களில் கடல் சீற்றம் காரணமாக மீனவர்கள் கடந்த 10 நாட்களுக்கு மேலாக கடலுக்குச் செல்ல இயலாத நிலையில், வருமானம் இன்றி மிகவும் சிரமப்பட்டு கொண்டுள்ளனர்.

மேலும், உப்பளங்களில் நீர் புகுந்து உப்பளத் தொழிலாளர்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, மீனவர்கள் மற்றும் உப்பளத் தொழிலாளர்களுக்கும் உடனடியாக தேவையான நிவாரணங்களை வழங்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

# தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான கோவில்களை பராமரிக்க ரூ. 3 கோடி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, பிப். 05-**

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்தின் 88 கோவில்களை பராமரிக்க ரூ. 3 கோடி நிதியை முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்.

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்தில் 88 ஒருங்கிணைந்த கோவில்களின் நிர்வாகமானது பரம்பரை அறங்காவலர், உதவி ஆணையர்/ பொருளாளர் மற்றும் மேலாளரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தேவஸ்தானத்துடன் இணைந்துள்ள 88 கோவில்களில் ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பால் உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட தஞ்சாவூர், பிரகதீஸ்வரர் கோவில், தாராசுரம், ஐராவதீஸ்வரர் கோவில், முக்கிய பிரார்த்தனை தலமாக விளங்கும் புன்னைநல்லூர், மாரியம்மன் கோவில் மற்றும் வைணவ 108 திவ்ய தேசங்களில் ஒன்றான தஞ்சை மாமணிகோவில் எனப்படும் வெண்ணாற்றங்கரை, மேல சிங்கபெருமாள் கோவில், மணிகுன்ற பெருமாள் கோவில் மற்றும் நீலமேகப் பெருமாள் கோவில் ஆகிய முக்கிய கோவில்கள் உள்ளன. தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்திற்குட்பட்ட கோவில்களில் பெரும்பாலும் குறைந்த வருவாய் மட்டுமே கிடைக்கப் பெறுகிறது. முதன்மையாக வருவாய் வரப்பெறும் தஞ்சாவூர், பிரகதீஸ்வரர் கோவில் மற்றும் புன்னைநல்லூர், மாரியம்மன் கோவில்களின் வருவாயை கொண்டே இதர கோவில்களின் நிர்வாகம் நிதி பற்றாக்குறையுடன் தற்போது மேலாண்மை செய்யப்பட்டு வருகிறது. இந்நிதி பற்றாக்குறையை போக்கிடும் வகையில் அரசு மானியமாக ஆண்டுதோறும் 3 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் இறையன்பு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் சந்தரமோகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் குமரகுருபரன், கூடுதல் ஆணையர்கள் கண்ணன், திருமகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஜோஷிமத் போல் காஷ்மீர் பகுதியிலும் வீடுகளில் விரிசல்

**ஜம்மு, பிப். 05-**

ஜம்மு - காஷ்மீர் மாநிலம் தோடா பகுதியில் 22 வீடுகளில் ஏற்பட்டுள்ள விரிசல்கள் குறித்து இந்திய புவியியல் குழு ஆய்வு செய்யவிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உத்தராகண்ட் மாநிலம் ஜோஷிமத் பகுதியில் ஏற்பட்டது போலவே ஜம்மு காஷ்மீர் மாநிலம் தோடா பகுதியில் வீடுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்த விரிசலால் இதுவரை 22 கட்டிடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 19 குடும்பங்கள் அப்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளன.

இதுகுறித்து தாத்ரி பகுதியின் துணை ஆட்சியர் ஆதார் ஆமின் சார்கர் கூறுகையில், தோடா மாவட்டத்தில் டிசம்பர் மாதத்தில் ஒரு வீட்டில் விரிசல் ஏற்பட்டது. நேற்று முன்தினம் வரை ஆறு கட்டிடங்களில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன. தற்போது விரிசல்களின் பாதிப்பு அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. பல கட்டிடங்களில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் அந்த பகுதி புதைந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது என தெரிவித்தார். மேலும் தோடா பகுதியின் நிலைமை துணை ஆணையர் மற்றும் மூத்த அதிகாரிகளால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளது. பாதிப்பு ஏற்பட்டுள்ள பகுதியில் ஆய்வு மேற்கொள்ள இந்திய புவியியல் வல்லுநர் குழு ஒன்றை அரசு அனுப்பியுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதியில் ஆய்வு மேற்கொண்ட பின்னர் தங்களது அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பிப்பார்கள். பாதிக்கப்பபட்ட பகுதியில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

## கர்நாடக சட்டசபை தேர்தல்: பா.ஜ.க மேலிட

# இணை பொறுப்பாளராக அண்ணாமலை நியமனம்

**பெங்களூர், பிப். 05-**

கர்நாடக சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ளதை யொட்டி அம்மாநில பா.ஜ.க. மேலிட இணை பொறுப்பாளராக அண்ணாமலையை நியமித்து ஜே.பி. நட்டா உத்தரவிட்டுள்ளார். கர்நாடக சட்டசபைக்கு இந்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ளது. தற்போது பசவராஜ் பொம்மை தலைமையில் பா.ஜ.க. ஆட்சி நடைபெறுகிறது. மீண்டும் ஆட்சியை கைப்பற்ற பா.ஜ.க. தேர்தல் பணிகளை தொடங்கி விட்டது. 224 தொகுதிகளை கொண்ட அந்த மாநிலத்தில் 150 தொகுதிகளை இலக்காக கொண்டு பா.ஜ.க. தேர்தல்



வேலைகளை முடுக்கி விட்டுள்ளது. அந்த மாநிலத்தின் தேர்தல் பொறுப்பாளர்களாக மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான், தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை ஆகியோரை நியமித்து அகில இந்திய பா.ஜ.க. தலைவர் ஜே.பி. நட்டா உத்தரவிட்டுள்ளார்.

# தீப்பெட்டி தொழிலாளர் நல வாரியத்திற்கு முதல்வரிடம் ரூ. 5 கோடி நிதி அளிப்பு

**சென்னை, பிப். 05-**

தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு விருதுநகர் மாவட்ட பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் ரூ.5 கோடி பங்களிப்பு நிதியினை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கினர்.

பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தி தொழிலில் ஈடுபடும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியத்தின் மூலமாக கல்வி, திருமணம், மகப்பேறு, ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை தமிழ்நாடு அரசு வழங்கி வருகின்றது. அத்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வரும் தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு விருதுநகர் மாவட்ட பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் ரூ.5 கோடி பங்களிப்பு நிதியினை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கினர்.

# இரிடியம் முதலீட்டு மோசடி அதிகரிப்பு: டி.ஜி.பி. எச்சரிக்கை

**சென்னை, பிப். 05-**

தமிழ்நாட்டில் இரிடியம் முதலீடு மோசடி அதிகரித்து வருவதாக தமிழ்நாடு காவல்துறை தலைவர் சைலேந்திர பாபு எச்சரித்துள்ளார். இதுகுறித்து அவர் தனது முகநூல் பக்கத்தில் விழிப்புணர்வு காணொளி பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், பொதுமக்கள் ரூ.5 லட்சம் முதலீடு செய்தால் அடுத்த 2 ஆண்டுகளில் ரூ.3 கோடி வரை லாபம் கிடைக்கும் என்று கூறி கும்பல் மோசடியில் ஈடுபட்டு வருகிறது. மேலும், சேலம், கன்னியாகுமரி மாவட்டங்களில் இது போன்ற மோசடி வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், கேரள போலீசார் தமிழகத்தில் உள்ள சக அதிகாரிகளுக்கு ஒரு சில புகார்களை அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதுபோன்ற முதலீடுகளை மக்கள் நம்ப வேண்டாம் என்றும், உழைத்து சம்பாதித்த பணத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும் டி.ஜி.பி. சைலேந்திர பாபு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தமிழகத்தை தொடர்ந்து புதுச்சேரியிலும்

# மின் எண்ணுடன் ஆதார் இணைப்பு கட்டாயம்

**புதுச்சேரி, பிப். 05-**

தமிழ்நாட்டை போல தற்போது புதுச்சேரியிலும் மின் இணைப்போடு ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்பாக தமிழ்நாட்டில் மின் இணைப்போடு ஆதார் எண் இணைப்பு கட்டாயம் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அது போல தற்போது புதுச்சேரியிலும் மின் இணைப்போடு ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயமாக்கப் பட்டிருக்கிறது.

ஆதார் எண் இணைக்க வேண்டும் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு ஆவணம் ஆதார் எண்ணிற்கு பதிலாக மின் இணைப்போடு இணைக்க வேண்டும் என்கிற ஒரு வழிமுறையையும் புதுச்சேரி அரசு விதித்துள்ளது. மின் இணைப்பின் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக அந்த வழிமுறைகளில் மாற்றம் ஏற்படுத்துவதற்காக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# விதவை கோலத்தில் மனுதாக்கல் செய்ய வந்த நபரால் பரபரப்பு



**ஈரோடு, பிப். 05-**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் சுயேட்சைகள் அதிக ஆர்வத்துடன் வேட்பு மனு தாக்கல் செய்து வருகின்றனர். சில சுயேச்சைகள் வினோதமான முறையில் வேடம் அணிந்து வேட்பு மனு தாக்கல் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று 5-வது நாளாக ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் மனுதாக்கல் நடைபெற்றது. அப்போது சென்னையைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர் விதவை கோலத்தில் வேட்பு மனு தாக்கல் செய்ய வந்தார். அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் நுழைவாயிலில் அவரை தடுத்து நிறுத்தி இதே கோலத்தில் உள்ளே செல்ல அனுமதி இல்லை என்று கூறினர். இதனையடுத்து அவர் சாதாரண உடை அணிந்து வந்து வேட்பு மனு தாக்கல் செய்தார். இது குறித்து அவர் கூறும் போது, நான் தமிழ்நாடு மது குடிப்போர் விழிப்புணர்வு சங்கத்தின் மாநில செயலாளராக உள்ளேன். இடைத்தேர்தலில் சுயேட்சையாக பாட்டில் சின்னத்தில் போட்டியிடுவதற்காக மனு தாக்கல் செய்ய வந்துள்ளேன். தேர்தலில் வெற்றி பெற்று எம்.எல்.ஏ.வானால் மது குடித்து இறந்த விதவை மனைவிமார்களுக்காக நான் சட்டமன்றத்தில் குரல் கொடுக்க உள்ளேன். காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் சட்டமன்றத்தில் விதவைகளுக்காக குரல் கொடுக்க தயாரானால் எனது மனுவை நான் வாபஸ் பெறுவேன் என்றார். இதனால் மாநகராட்சி அலுவலகத்தில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

## ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்:

# பறக்கும் படை சோதனையில் இதுவரை ரூ.13.49 லட்சம் பறிமுதல்

**ஈரோடு, பிப். 05-**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைதேர்தல் நடைபெறுவதையொட்டி பறக்கும் படை சோதனையில் இதுவரை ரூ. 13.49 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதியில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளது. இதையடுத்து ரூ. 50 ஆயிரத்திற்கும் மேல் ரொக்க பணம், ரூ.10 ஆயிரத்திற்கு மேல் பரிசுப்பொருட்கள் போன்றவை உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்டால் பறிமுதல் செய்யப்படும் என அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். கடந்த மாதம் 20-ம் தேதி முதல் 4 நிலை கண்காணிப்பு குழுவினர், 3 பறக்கும் படையினர் சுழற்சி முறையில் ஈரோடு கிழக்கு தொகுதி முழுவதும் 24 மணி நேரமும் வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுடன் இணைந்து போலீசாரும் சோதனை நடத்தி வருகின்றனர். கடந்த மாதம் 20-ம் தேதி முதல் நேற்று முன்தினம் வரை 10 பேரிடமிருந்து உரிய ஆவணங்களின்றி கொண்டு வரபப்பட்ட ரூ.13 லட்சத்து 49 ஆயிரம் பறிமுதல் செய்யப்பட்டு அந்தப் பணம் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அந்த பணம் மாவட்ட கருவூலத்தில் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளது.

இது தவிர போலீசார் மேற்கொண்ட சோதனையில் இதுவரை 17 ஆயிரத்து 610 ரூபாய் மதிப்பிலான 25,560 லிட்டர் மதுபானங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதே போல் 4,800 ரூபாய் மதிப்பிலான கஞ்சா, புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

## ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்:

# வாக்காளர்களுக்கு ஆரத்தி எடுத்த அமைச்சர் மா. சுப்பிரமணியன்



**ஈரோடு, பிப். 05-**

ஈரோடு கருங்கல்பாளையத்தில் பிரச்சாரத்திற்கு சென்ற அமைச்சர் மா. சுப்பிரமணியன் வாக்காளர்களுக்கு ஆரத்தி எடுத்தார்.

ஈரோடு கருங்கல்பாளையத்தில் வீடு, வீடாக சென்று திண்ணை பிரச்சாரத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஈடுபட்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

இந்த ஆட்சி குறித்தான மதிப்பீடுகளில் மக்கள் மிகவும் திருப்திகரமாக இருக்கிறார்கள். இந்த ஆட்சியின் திட்டங்களும் முதல்வரின் பணிகளும் வாக்காளர்களுக்கு மகிழ்ச்சியான மனநிலையை ஏற்படுத்தியிருக்கிறது. ஏறத்தாழ ரூ.400 கோடி மதிப்பில் ஈரோடு மாநகராட்சியில் கடந்த ஒன்றரை ஆண்டு கால ஆட்சியில் நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஈரோடு மாநகராட்சியில் எந்த பகுதிக்கு சென்றாலும் மழை நீர் வடிகால் பணி, பாதாள சாக்கடை விரிவாக்க பணி என ஏராளமான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதனால் சாலைகள் கூட சில இடங்களில் சேதம் அடைந்திருக்கின்றன. பாதாள சாக்கடையும், புதிய மழைநீர் வடிகால் பணியும் முடிவுற்றால் மீண்டும் அந்த சாலைகள் புதுப்பித்து தரப்படும்.

அந்த பணிகளுக்கும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. தேர்தல் முடிந்தவுடன் அந்த பணிகளும் செய்யப்படும். ஈரோடு மாநகராட்சி ஒரு மிகச்சிறந்த மாநகராட்சியாக வருவதற்கு அனைத்து கட்டமைப்புகளையும் மேம்படுத்த முதல்வர் ரூ.400 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்து பணிகளை மேற்கொண்டு இருக்கின்றார்.

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு ஆண் வாரிசு இருந்தாலும் ஆதரவற்றவர்களாக இருந்தாலும் முதியோர் உதவித்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே வாங்கிக் கொண்டிருந்தவர்களுக்கும், நிறுத்தப்பட்டவர்களுக்கு அனைத்து வருவாய் அலுவலகங்களிலும் கணக்கெடுக்கப்பட்டு உதவி தொகை வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக அமைச்சர் சுப்பிரமணியனை வரவேற்க பெண்கள் ஆரத்தி மற்றும் திருஷ்டி தேங்காயுடன் வீடுகளில் நின்று இருந்தனர். அப்போது அமைச்சர் சுப்பிரமணியனிடம் இருந்து ஆரத்தியை வாங்கி வாக்காளர்களுக்கே ஆரத்தி எடுத்தார். மேலும் அவர்களது தலையை தேங்காயால் சுற்றி உடைத்தார்.

# ஏழை மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000: மார்ச் 8-முதல் விண்ணப்பம் ஏற்பு: ம.பி. முதல்வர் அறிவிப்பு

**போபால், பிப். 05-**

மத்திய பிரதேச மாநிலத்தில் ஏழை மகளிருக்கு இனி மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படும் என அம்மாநில முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் அறிவித்துள்ளார். மார்ச் 8-ம்தேதி சர்வதேச மகளிர் தினத்தில் இருந்து இந்த திட்டத்திற்கான விண்ணப்பங்களை பெறும் நடைமுறை தொடங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் போபால் நகரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது,

மாநிலத்தில் பெண்கள் எளிமையாக வாழ்க்கையை நடத்தி செல்ல வேண்டும் என விரும்புகிறேன். அதனால், இதற்கு முன்னர் உள்ள திட்டங்களுடன் தற்போது இந்த லட்லி பெஹ்னா யோஜனா திட்டமும், பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் என தெரிவித்தார்.

அதன்படி, மத்திய பிரதேச மாநில ஏழை மகளிருக்கு இனி மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படும் என சவுகான் அறிவித்து உள்ளார். வருகிற மார்ச் 8-ம்தேதி சர்வதேச மகளிர் தினத்தில் இருந்து இந்த திட்டத்திற்கான விண்ணப்பங்களை பெறும் நடைமுறை தொடங்கும். இந்த திட்டத்தின் கீழ் பெறும் தொகையை கொண்டு, அவர்கள் தங்களது குழந்தைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொள்ள முடியும். வேறு மாநிலங்களில் நடைபெறாத விஷயங்கள் மத்திய பிரதேசத்தில் நடைபெறுகின்றன. யாரும் செய்யாத விசயங்களை நான் செய்வேன்.

மாநிலத்தில் 83 லட்சம் பேர் முக்கிய மந்திரி ஜன சேவா அபியான் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டு உள்ளனர். அவர்கள் அரசு திட்டங்களை பலன் பெற தகுதியானவர்கள். 38 வெவ்வேறு திட்டங்களின் பலனை பெறுவதற்காக இந்த குடிமக்கள் அனைவருக்கும் ஒப்புதல் கடிதங்கள் வினியோகிக்கும் பணிகள் மாநிலத்தில் நடந்து வருகின்றன என அவர் தெரிவித்தார். இதில், விடுபட்ட மக்களுக்காக விகாஸ் யாத்ரா என்ற பெயரிலான திட்டமும் இன்று (பிப்ரவரி 5 முதல்) தொடங்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வழங்க வேண்டும்

## ஓ. பன்னீர்செல்வம் வலியுறுத்தல்

**சென்னை, பிப். 05-**

மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 30 ஆயிரம் வழங்கிட வேண்டுமென ஓ. பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தென் கிழக்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த நான்கு நாட்களாக டெல்டா மாவட்டங்களில் பரவலாக கனமழை பெய்து வருவதால், லட்சக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பயிர்கள் பாதிக்கப்பட்டு உள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 30 ஆயிரம் ஏக்கரில் சம்பா பயிர் பயிரிடப்பட்ட நிலையில், 20 ஆயிரம் ஏக்கரில் அறுவடை செய்யப்பட்டு உள்ளது. எஞ்சியுள்ள ஏக்கரில் பயிரிடப்பட்ட சம்பா பயிர்கள் அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில் கடந்த நான்கு நாள் தொடர் மழை காரணமாக மழை நீர் தேங்கி அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.

தொடர்ந்து மழை பெய்து வருவதால், ஏற்கனவே அறுவடை செய்த நெல்லையும் காய வைக்க முடியாத சூழ்நிலை உருவாகி உள்ளது. மழை நீடித்தால் பாதிப்பு மேலும் அதிகரிக்கக்கூடும். மயிலாடுதுறை மாவட்டத்தில் இருபதாயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட பயிர்கள் பாதிக்கப்பட்டு உள்ளது. உளுந்து, பயறு போன்றவற்றை சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்திற்குட்பட்ட ஒரத்தநாடு, திருவோணம், பட்டுக்கோட்டை பகுதிகளில் நெல் மற்றும் கடலை சாகுபடி பாதிக்கப்பட்டு உள்ளது என்று விவசாயிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். பாதிக்கப்பட்ட நெற் பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 30 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் அரசு வழங்கிட வேண்டும். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# வடலூர் தைப்பூச ஜோதி தரிசன விழா கொடியேற்றத்துடன் தொடங்கியது

**வடலூர், பிப். 05-**

வடலூர் திரு அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் 152-வது ஆண்டு தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா கொடியேற்றத்துடன் நேற்று காலை தொடங்கியது. இன்று (5-ம் தேதி) 7 திரைகளை விலக்கி ஜோதி தரிசனம் நடக்கிறது.

கடலூர் மாவட்டத்தில் உலகப் புகழ்பெற்ற வடலூர் திரு அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் ஆண்டுதோறும் தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா வெகு விமரிசையாக நடைபெறும். இந்த ஆண்டு 152-வது ஜோதி தரிசன விழாவையொட்டி, சத்திய ஞான சபையில் அதிகாலை 5 மணிக்கு அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம் பாடப்பட்டது.

இதைத்தொடர்ந்து காலை 7.30 மணிக்கு தரும சாலையில் சன்மார்க்க கொடி ஏற்றப்பட்டது. வள்ளலார் பிறந்த ஊரான மருதூர் வள்ளலார் இல்லத்தில் இருந்து மருதூர் கிராம மக்களால் கொடியேற்றப்பட்டது.

இதையடுத்து வள்ளலார் தண்ணீரால் விளக்கு எரியச் செய்த கருங்குழியிலும், அவர் சித்திபெற்ற மேட்டுக்குப்பத்திலும் சன்மார்க்கக் கொடிகள் ஏற்றப்பட்டது. இதையடுத்து சத்திய ஞான சபைக்கு இடம் வழங்கிய பார்வதிபுரம் கிராம மக்கள் பலவகை பழங்கள், சீர்வரிசைப் பொருள்களுடன், வள்ளலார் பயன்படுத்திய பொருள்களையும் வள்ளலார் திருவுருவ படத்தையும் பல்லக்கில் வைத்து மேள தாளங்கள் முழங்க ஊர்வலமாக சத்திய ஞான சபை வளாகத்தில் அமைந்துள்ள கொடிமரம் அருகே வந்து ஒன்று கூடினர்.

பின்னர் சன்மார்க்க அன்பர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அருட்பெருஞ்ஜோதி, அருட்பெருஞ்ஜோதி, தனிப் பெருங்கருணை -அருட்பெருஞ்ஜோதி என்ற வள்ளலாரின் பாடலை பாடியும் வள்ளலார் எழுதிய கொடி பாடல்களைப் பாடி கொண்டே காலை 10 மணியளவில் சன்மார்க்கக் கொடியேற்றம் நடைபெற்றது. இன்று (5-ம் தேதி) காலை 6 மணிக்கு முதல் ஜோதி தரிசனம் நடைபெறுகிறது. தொடர்ந்து காலை 10 மணி, நண்பகல் 1 மணி, இரவு 7 மணி, இரவு 10 மணி, 6ம் தேதி மறுநாள் (6-ம் தேதி) காலை 5.30 மணி என 6 காலங்களில் 7 திரைகளை நீக்கி ஜோதி தரிசனம் நடைபெறும். இதையடுத்து 7-ம் தேதி (செவ்வாய்க்கிழமை) 12 மணி முதல் மாலை 6 மணி வரை மேட்டுக்குப்பத்தில் சித்தி வளாக தரிசனமும் நடைபெறும். விழாவை காணவரும் பக்தர்களுக்காக அறநிலைய துறை மற்றும் வடலூர் நகராட்சி சார்பில் பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்புக்காக 900 போலீசாரும் குவிக்கப் பட்டுள்ளனர்.

# இலவச புடவைக்கான டோக்கன் வாங்க சென்ற போது கூட்ட நெரிசலில் சிக்கி 4 பெண்கள் பலி

**வாணியம்பாடி, பிப். 05-**

வாணியம்பாடியில் தனியார் நிகழ்ச்சியில் இலவச புடவைக்கான டோக்கன் வாங்க சென்ற போது கூட்ட நெரிசலில் சிக்கி 4 பெண்கள் மரணம் அடைந்தனர்.

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில் தைப்பூசத்தை முன்னிட்டு இலவச புடவைகள் வழங்குவதாக தனியார் நிறுவனம் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்தத் தகவலின் அடிப்படையில் 1000-க்கும் மேற்பட்ட பெண்கள் ஒரே இடத்தில் குவிந்தனர். இதன் காரணமாக அங்கு கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இந்தக் கூட்ட நெரிசலில் சிக்கி பல பெண்கள் மயக்கம் அடைந்தனர்.

தகவல் அறிந்து வந்த காவல் துறையினர் கூட்ட நெரிசலில் சிக்கியவர்களை மீட்டு அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இந்நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பெண்களில், 4 பேர் சிகிச்சை பலனின்றி மரணம் அடைந்தனர். மேலும் ,12 பேர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவம் குறித்து வருவாய் துறையினர் மற்றும் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் அரசு மருத்துவமனையில் வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர் பிரேமலதா விசாரணை மேற்கொண்டு வருகிறார்.

# மற்றவர்களை, அவர்களின் வேலையை செய்ய விடுங்கள்

## மத்திய அரசு மீது கெஜ்ரிவால் காட்டம்

**புது டெல்லி, பிப். 05-**

மற்றவர்களை அவர்களின் வேலையைச் செய்ய விடுங்கள் என்று மத்திய அரசு மீது டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் தனது டுவிட்டர் பக்கத்தில் சாடியுள்ளார்.

மாநில அரசுகள், நீதிபதிகள், விவசாயிகள், வணிகர்கள் என அனைவருடனும் பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு சண்டையிட்டு வருவதாக டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் குற்றம் சாட்டியுள்ளார். தலைமை நீதிபதிகளை கொலீஜியம் நியமனம் செய்வது தொடர்பாக மத்திய அரசுக்கும், சுப்ரீம் கோர்ட்டிற்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து முரண் குறித்த செய்தி ஒன்றைச் சுட்டிக்காட்டி இதனைத் தெரிவித்துள்ள கெஜ்ரிவால், மற்றவர்கள் வேலையில் தலையிட வேண்டாம் என்று மத்திய அரசுக்கு அறிவுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், நீதிபதிகள், சுப்ரீம் கோர்ட், மாநில அரசுகள், விவசாயிகள், வணிகர்கள் என அனைவருடனும் மத்திய அரசு ஏன் மோதிக் கொண்டே இருக்கிறது? அனைவருடனும் மோதிக் கொண்டிந்தால் நாடு முன்னேற்றப்பாதையில் பயணிக்க முடியாது. நீங்கள், உங்கள் வேலையைப் பாருங்கள். மற்றவர்களை அவர்களின் வேலையைச் செய்ய விடுங்கள். மற்றவர்களின் வேலைகளில் தலையீடாதீர்கள் என்று அந்த பதிவில் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

# திண்டுக்கல் ஐ.எம்.ஏ கிளையின் சார்பில் புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி செயலாளர் டாக்டர்.கிறிஸ்டோபர்பாபு தலைமையில் நடைபெற்றது



**திண்டுக்கல் பிப்:-5**

திண்டுக்கல்லில் இந்திய மருத்துவ கிளை சார்பில் செயலாளர் பிரபல டாக்டர். கிறிஸ்டோபர்பாபு தலைமையில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

திண்டுக்கல் இந்திய மருத்துவ சங்கம் கிளையின் சார்பாக உலக புற்றுநோய் தின விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இந்திய மருத்துவ கிளை கழகத்தின் செயலாளர், டாக்டர். கிறிஸ்டோபர் பாபு தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது.


திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் துவங்கப்பட்டு பேருந்து நிலையம் வழியாக நகர் முக்கிய பகுதிகளில் சென்று திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முடிவடைந்தது. இந்த பேரணியில் திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவர்கள், பயிற்சி மருத்துவர்கள்,அரசு மற்றும் தனியார் கல்லூரி செவிலியர் மாணவர்கள் கலந்து கொண்டனர். புற்றுநோய் என்ன காரணங்களால் வருகிறது என்பதை விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேனர்கள் மற்றும் வாசகங்களை கொண்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.பேரணியை திண்டுக்கல் மருத்துவ கல்லூரி முதல்வர் மரு. ராஜசிரி துவக்கிவைத்தார். மேலும் பேரணியில் தலைவர் மரு. மகாலெட்சுமி, பொருளாளர் மரு. டீன் வெஷ்லி மற்றும் மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு. வீரமணி ,மரு. அன்புச்செல்வன் ,மரு சுனிதா ஆகியோர் மற்றும் மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.பேரணிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக திண்டுக்கல் இந்திய மருத்துவ சங்கத்தின் செயலாளர் மரு. ஜோசப்கிறிஸ்டோபர் பாபு செய்திருந்தார்.

# ஜெயபாரத் ஹோம்ஸ் டைட்டன் சிட்டி துவக்க விழா இன்று நடக்கிறது : நடிகை ஆண்ட்ரியா இசை நிகழ்ச்சி

## நிர்வாக இயக்குநர் பி.ஜெயகுமார் தகவல்

**மதுரை, பிப் 05-**

ஜெயபாரத் ஹோம்ஸ் டைட்டன் சிட்டி துவக்க விழா இன்று நடக்கிறது. இதில் நடிகை ஆண்ட்ரியா இசை நிகழ்ச்சி நடைபெறும் என்று நிர்வாக இயக்குநர் பி.ஜெயகுமார் தெரிவித்தார்.




ஜெயபாரத் ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் சூர்யா நகரில் டைட்டன் சிட்டி வீடு கட்டும் திட்டத்திற்கான தொடக்க விழா இன்று 5 -ம் தேதி நடக்கிறது. இதில் நடிகை ஆண்ட்ரியா பங்கேற்று இசை நிகழ்ச்சி நடத்துகிறார். ஜெயபாரத் ஹோம்ஸ் நிர்வாக இயக்குனர் ஜெயக்குமார் கூறுகையில், நாங்கள் கட்டுமானத்துறையில் கடந்த 27 வருடங்களாக இருந்து வருகிறோம் மேலும், 3வது தலைமுறையாக இத்தொழிலில் ஈடுபட்டு சிறப்புமிக்க விடுகளை கட்டித் தந்து கொண்டிருக்கிறோம். இந்த நிறுவனம் தொடங்கி 25 வருடத்திற்கு மேலாகிறது.

எங்கள் ஜெயபாரத் ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக மதுரை சூர்யா நகர் பகுதியில் 11.5 ஏக்கரில் டைட்டன் சிட்டி என்ற பெயரில் 300 -க்கும் மேற்பட்ட வீடுகள் கட்டப்பட்ட உள்ளது. இதற்கான தொடக்க விழா இன்று 5 - ம் தேதி ஞாயிறுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற உள்ளது. இந் நிகழ்ச்சிக்கு ஜெயபாரத் ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிர்வாக இயக்குநர் பி.ஜெயகுமார் தலைமை தாங்குகிறார். நிர்வாகி ஜெ.நிர்மலாதேவி குத்துவிளக்கேற்றி தொடங்கி வைக்கிறார். அதனைத் தொடர்ந்து நடிகையும் பாடகியுமான ஆண்ட்ரியா இசை நிகழ்ச்சி நடக்கிறது. தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத் தலைவர் என்.ஜெகதீசன் சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார். இவ்வாறு ஜெயபாரத் நிர்வாக இயக்குநர் பி.ஜெயகுமார் கூறினார்.

# திருமங்கலம் அருகே உச்சப்பட்டி குடியிருப்பு பகுதியில் மூன்று மாதங்களாக வற்றிடாத மழை வெள்ளம்: பொதுமக்கள் அவதி

**திருமங்கலம்.பிப்.05.**



மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே கடந்த மூன்று மாதத்திற்கு முன்பு பெய்த கன மழையால் குடியிருப்பு பகுதியில் புகுந்த மழை வெள்ளம் வற்றாமல் இருப்பதால் அப்பகுதி பொதுமக்கள் பெரும் அவதிக்கு ஆளாகி வருகின்றனர்.

திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட உச்சப்பட்டி கிராமத்தில் சிவன் நகர் இந்திராநகர் பகுதிகளில் 1500-க்கும் மேற்பட்ட வீடுகள் அமைந்துள்ளது. இப்பகுதி விரிவாக்க பகுதி என்பதால் கடந்த சில ஆண்டுகளாக சாலைகளை அமைத்து தராமல் குண்டும் குழியுமாக காணப்படுகிறது. மேலும் உச்சப்பட்டி கண்மாயில் தண்ணீர் நிறைந்தால் குடியிருப்பு பகுதிகளுக்குள் மழை நீர் புகுந்து விடுகிறது.ஆண்டுக்கு ஒரு முறை இப்பகுதியில் மழை வெள்ளம் சூழ்ந்து குடியிருப்பு வாசிகள் வெளியே செல்ல முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது.மேலும் இப்பகுதியில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையம் கடந்த மூன்று மாதமாக இப்பகுதியில் தண்ணீர் வற்றாமல் தீவாக காட்சி யளிக்கிறது. இதன் காரணமாக இப்பகுதியில் வசித்திடும் மக்கள் அடிக்கடி நோயால் பாதிக்கப்படுவதாகவும், விஷ ஐந்துகள் வீட்டிற்குள் நுழைவதாகவும் இதனால் தங்களது அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப் படுவதாகவும் குற்றம் சாட்டினர்.

இது தொடர்பாக ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கவலையுடன் தெரிவித்தனர். மேலும் அங்கன்வாடி மையத்தில் குழந்தைகள் படிக்க முடியாததால் தனியாக வீடு எடுத்து அங்கன்வாடி மையத்தை நடத்துவதால் குழந்தைகளை அங்கு அனுப்புவதற்கு பெற்றோர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

எனவே மாவட்ட நிர்வாகம் இந்த பிரச்சனையில் தலையிட்டு சாலைகளை உயர்த்தி, கண்மாயிலிருந்து மழை நீர் குடியிருப்பு பகுதியில் நுழையாதவாறு கண்மாய் கரையை உயர்த்த வேண்டும் என்றும் கழிவு நீர் கால்வாய் அமைத்து தந்திட வேண்டும் எனவும் அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நத்தம் அருகே விவசாயிகளுக்கு மதிப்பீடு பயிற்சி



**நத்தம், பிப், 5**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே லிங்கவாடி கிராமத்தில் ஊரக வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. இதில் மதுரை வேளாண் கல்லூரி இறுதி ஆண்டு மாணவர்கள் இப்ராஹிம், சத்யதேவ், கார்த்திகேயன், கார்த்திக், தருண், நேதாஜி, முகிலேஷ், முகிலன், கிஷோகர் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயம்,நிலஅமைப்பு, பயிர் வகைகள்,வரலாற்றுப் பின்புலம் ஆகியவற்றைப் பற்றி மதிப்பீடு செய்து விவசாயிகளுக்கு செயல்முறை பயிற்சி அளித்தனர். இதில் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணாவின் 54வது நினைவு தினத்தை முன்னிட்டு மதுரை புறநகர் தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில், மாவட்ட கழக செயலாளர் சேடப்பட்டி. மு.மணிமாறன் ஆலோசனையின் பேரில் திருமங்கலத்தில் அறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு கழக விவசாய அணி மாநில இணைச் செயலாளர் ம.முத்துராமலிங்கம், மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், நகர செயலாளர் ஸ்ரீதர், நகர் மன்ற தலைவர் ரம்யாமுத்துக்குமார் மற்றும் கட்சி நிர்வாகிகள், கவுன்சிலர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் லைன்ஸ் பள்ளியில் விளையாட்டு பூங்கா திறப்பு

**விருதுநகர்.பிப்.5.**

ஸ்ரீவில்லிபுத்தூர் லயன்ஸ் இன்டர்நேஷனல் பள்ளியில் மழலையர் வகுப்பறைகள் விளையாட்டு பூங்கா திறப்பு விழா நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட கவர்னர் விஸ்வநாதன் தலைமை வகித்து பேசினார் . பேசியதாவது.

லயன்ஸ் சங்கம் மூலம் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது. விரைவில் டயாலிசிஸ் மையங்கள் துவங்கப்படும். ஆறு மாவட்டங்களில் ஏழை முதியவர் பசியை போக்கிட பசிக்கு உணவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதிகரித்து வரும் மின் சாதன கழிவுகளை அளிப்பதற்கு ஈ வேஸ்ட் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது என்றார். பூங்கா திறப்பு விழாவில் முதலாம் துணை ஆளுநர் பிரான்சிஸ் ரவி, இரண்டாம் துணை ஆளுநர் அய்யாதுரை, முன்னாள் மாவட்ட ஆளுநர் முருகன் நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். லயன் சங்கத் தலைவர் விஜய் மெர்சன்ட், செயலாளர் ரஞ்சித், பொருளாளர் சிவ குருநாதன் பள்ளி தாளாளர் வெங்கடாஜலபதி, முதல்வர் ஹெப்சி பாய் மற்றும் லைன்ஸ் கிளப் நிர்வாகிகள் உறுப்பினர்கள் உட்பட பலர் விழாவில் கலந்து கொண்டனர்.

# ஒட்டன்சத்திரம் சக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பச்சைவால் நட்சத்திரத்துக்கு வரவேற்பு



**ஒட்டன்சத்திரம்.பிப்.5.**

சூரியனை 50000 ஆண்டுகளுக்கு ஒரு முறை சுற்றி வரும் பச்சை வால் நட்சத்திரமானது இரட்டை கரிமம் மற்றும் சைனோஜன் கொண்டு சூரிய ஒளி படும் போது பச்சை நிறத் தோற்றமளிக்கிறது.

இந்த பச்சை வால் நட்சத்திரம் வடக்கு கீழ் வானத்தில் இரவு 10 மணிக்கு எழும். இதனை மறுநாள் காலை 11 மணி வரை தொலைநோக்கி மூலம் காண முடியும் . மேலும் சூரிய குடும்பத்தின் உறுப்பினராகிய வால் நட்சத்திரம் தூசி மற்றும் பாறை துகள்கள் கலந்த பனிக்கட்டிகளால் உருவானது. சூரிய வெப்பத்தால் உடலில் வால் முளைத்து நீள்வதால் வால் நட்சத்திரம் என்று அழைக்கப்படுகிறது.

இத்தகைய சிறப்பு பெற்ற பச்சைவால் நட்சத்திரத்தை வரவேற்கும் விதமாக சக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இயற்பியல் துறை சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. வரவேற்போம் பச்சை வால் நட்சத்திரத்தை என்ற நிகழ்ச்சியை கல்லூரியின் தாளாளர் வேம்பணன், முதல்வர் தேன்மொழி தொடங்கி வைத்தனர். இதில் இயற்பியல் துறை மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் பச்சை வால் நட்சத்திரத்தை வரவேற்கும் அட்டைகளை ஏந்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். படம் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சக்தி கல்லூரியில் பச்சைவால் நட்சத்திரத்திற்கு வரவேற்பு தெரிவித்தனர்.

# பழனி பாதயாத்திரை பக்தர்களுக்கு வத்தலகுண்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சார்பாக ஒளிரும் குச்சி, பிஸ்கட், வாட்டர் பாட்டில்கள் சப்ளை

**வத்தலகுண்டு பிப்..05**



திண்டுக்கல் மாவட்டம். வத்தலகுண்டு வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகத்தின் சார்பாக பழனி பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு. இணை போக்குவரத்து ஆணையர் மதுரை பொன் செந்தில்நாதன் உத்தரவின் பேரில் திண்டுக்கல் மாவட்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் சுரேஷ் தலைமையில் வத்தலகுண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் கண்காணிப்பாளர் சீனிவாசன். இளநிலை உதவியாளர் சுந்தரம் ஆகியோர் பழனி செல்லும் பாதயாத்திரை பக்தர்களுக்கு சாலை விதிகளை கடைப்பிடித்து சாலையின் இடது புறமாக நடைபயணம் மேற்கொள்ளுமாறு விழிப்புணர்வு ஏற்படுத்தி.அதனைத் தொடர்ந்து இரவு நேரங்களில்பக்தர்கள்பயன்படுத்துவதற்காக ஒளிரும் குச்சிகள்வழங்கப்பட்டது.

மேலும் பக்தர்களுக்கு பிஸ்கட் வாட்டர் பாட்டில்கள் அனைத்தும் வழங்கப் பட்டது.

அனைத்துஏற்பாடுகளையும்வத்தலகுண்டுமோட்டார் வாகனபகுதிஅலுவலகத்தின் சார்பாக வழங்கப்பட்டது பக்தர்கள் மகிழ்ச்சியுடன் வாங்கி சென்றார்கள்.

# பயிர்களை உலர வைக்க களம் தேவை:விவசாயிகள் கோரிக்கை

**விருதுநகர்.பிப்.5.**

வத்திராயிருப்பு அருகே சுந்தரபாண்டியன் பகுதியில் விளை பயிர்களை உலர வைக்க களம் அமைக்க வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

சுந்தரபாண்டியன் பேரூராட்சி சுற்றுவட்டார பகுதிகளில் பல நூறு ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் நெல், சோளம் உட்பட பல்வேறு வகை பயிர்களை பயிரிட்டு வருகின்றனர். தங்களின் வயல்களில் விளையும் பயிர்களை வயல்களில் இருந்து கொண்டு வந்து உலர வைத்து எடுத்துச் செல்ல களம் வசதி இல்லாமல் சிரமப்படுகின்றனர். இதனால் கோட்டையூர் ரோட்டில், அர்ஜுனா நதி ஆற்றுப்பாலத்தில் விலை பொருள்களை உலர வைத்து வருகின்றனர். குறிப்பிட்ட தூர இடைவெளியில் களம் அமைக்க வேண்டுமென விவசாயிகள் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்தும் உள்ளாட்சி பிரதிநிதிகளும் அதிகாரம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என விவசாயிகள் வருத்தப்பட்டனர். எனவே இனிய காலம் தாமதம் செய்யாமல் களம் அமைத்து தர வேண்டும் என சுந்தரபாண்டியன் சுற்றுவட்டார விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

# அழகர்கோவில் ஆறாவது படை வீடு சோலைமலை முருகன் கோவிலில் தைப்பூச திருவிழா: பக்தர்கள் குவிந்தனர்

**அலங்காநல்லூர், பிப்.5-**



முருகப் பெருமானின் ஆறாவது படை சோலை மலை முருகன் கோவில் பிரசித்தி பெற்றதாகும்.அழகர் மலை உச்சியில் அமையபெற்றுள்ளது. இக்கோவிலில் நடைபெறும் திருவிழாக்களில் தைப்பூச திருவிழாவும் சிறப்புடையதாகும்.இந்த விழாவானது கடந்த மாதம் 26ந் தேதி காலையில் தங்கக் கொடி மரத்தில் கொடி ஏற்றத்துடன் தொடங்கியது. முன்னதாக மூலவர் சன்னதியில் வித்தக விநாயகர், மூலவர் சுவாமி, மற்றும் வேல் சன்னதியிலும் விசேஷ பூஜைகள் மஹா தீபாராதனைகள் நடந்தது. அன்று பூத வாகனத்தில் சாமி புறப்பாடும் நடந்தது. தொடர்ந்து தினமும் அன்னம் காமதேனு, , ஆட்டு கிடாய், பூச்சப்பரம், , யானை, பல்லாக்கு, குதிரை, ஆகிய வாகனங்களிலும் , தங்க தேரோட்டமும் வெள்ளி மயில் வானத்திலும் சுப்பிரமணியசுவாமி எழுந்தருளினார். நேற்று 4ந் தேதி அன்று முக்கிய நிகழ்வாக தைப்பூச விழா நடைபெற்றது, 'இதில் தீர்த்தவாரி, மற்றும் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி மேளதாளம் முழங்க தீவட்டி, வர்ணக் குடை பரிவாரங்களுடன் கோவில் உள் பிரகாரத்தில் புறப்பாடு நடந்தது. பின்னர் அங்குள்ள சஷ்டி மண்டப வளாகத்தில் சுவாமிக்கு பால் பழம், பன்னீர், உள்பட 16 வகையான அபிஷேகங்கள், சிறப்பு அலங்காரம், தீபாராதனைகளும் நடந்தது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு விளக்கேற்றி சுவாமி தரிசனம் செய்தனர். இத்துடன் திருவிழா நிறைவு பெற்றது. இதற்கான ஏற்பாடுகளை தக்கார் வெங்கடாசலம், துணை ஆணையர் ராமசாமி மற்றும் கண்காணிப்பாளர்கள், உள்துறை அலுவலர்கள் ,கோவில் பணியாளர்கள் செய்திருந்தனர்.

# விருதுநகரில் நெடுஞ்சாலைத்துறை பராமரிப்பு ஊழியர்கள் காதில் பூ சுற்றி ஆர்ப்பாட்டம்

**விருதுநகர்.பிப்.5.**

விருதுநகரில் நெடுஞ்சாலைத்துறை சாலை பராமரிப்பு ஊழியர் சங்கம் சார்பில் காதில் பூச்சுற்றி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நெடுஞ்சாலைத்துறை சாலை பராமரிப்பு ஊழியர்கள் 41 மாதம் பணி நீக்க காலத்தை ஓய்வூதிய பலன்களில் பொருத்தும் வகையில் அரசாணை அறிவிப்பது, காலி பணியிடங்களில் நிரப்புவது, ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி காதில் பூசுற்றி ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் முத்துக்குமார் தலைமை வகித்தார், மாநிலத் தலைவர் வெங்கிடு, செயலாளர் ஜெயசீலன் அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் லியாகத் அலி, இணைச் செயலாளர் ராஜ்குமார், ஊரக வளர்ச்சித்துறை மாவட்ட செயலாளர் பரமேஸ்வரன், சி பி எஸ் மாநில ஒருங்கிணைப்பாளர் முனியாண்டி உட்பட பலர் அரசை கண்டித்து கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள். ஆர்ப்பாட்டத்தில் 50க்கும் மேற்பட்ட நெடுஞ்சாலை துறை சாலை பராமரிப்பு ஊழியர்கள் மற்றும் பிற ஊழிய சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் அலுவலர்கள் கலந்து கொண்டனர். நிறைவாக மாவட்ட பொருளாளர் ஆழ்வார் நன்றி கூறினார்.

# வத்தலகுண்டில் லட்சுமி ராம் வித்யாலயா நர்சரி, பிரைமரி பள்ளியின் 22-வது ஆண்டு விழா நடைபெற்றது



**வத்தலகுண்டு.பிப்.05**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு காந்தி நகரில் உள்ள லட்சுமி ராம் வித்யாலயா நர்சரி, பிரைமரி பள்ளியில் 22 வது ஆண்டு விழா நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்ட கல்வி அதிகாரி( தனியார் பள்ளிகள்) எஸ் ராகவன் தலைமை தாங்கினார். பள்ளியின் தாளாளர் டாக்டர் சிவ சுப்பிரமணியன் மற்றும் சிவ காமி சுந்தரி அம்மாள் முன்னிலை வகித்தனர்.

வத்தலகுண்டு வட்டார கல்வி அலுவலர் ஜான் பீட்டர் அமலநாதன்,நிலக்கோட்டை வட்டார கல்வி அலுவலர் எஸ்தர் ராஜம் ஆகியோர் கலந்து கொண்டு மாணவ மாணவியர்களுக்கு எதிர்கால சிந்தனைகள் குறித்து பேசினார்கள்.

விளையாட்டுப் போட்டிகள் மற்றும் சாதனை படைத்த மாணவ மாணவியர்களுக்கு சான்றிதழ்கள் பரிசுகள் வழங்கப்பட்டது.

முன்னதாக நான்காம் வகுப்பு மாணவி ஜெய் தன்சிகா அனைவரையும் வரவேற்றார். பள்ளியின் முதல்வர் எம் மூர்த்தி ஆண்டறிக்கை வாசித்தார் பள்ளியின் செயல்பாடுகள் குறித்து விலைக்கு பேசினார்.

பள்ளி மாணவ மாணவியர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவின் முடிவில் ஐந்தாம் வகுப்பு மாணவன் விஸ்வஜித் நன்றி கூறினார்.

விழாவில் பள்ளி மாணவ மாணவியர்கள் பெற்றோர்கள் பொதுமக்கள் ஆசிரியை ஆசிரியர்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.

### தர்மபுரி குமாரசாமிப்பேட்டை

# சிவசுப்பிரமணிய சாமி கோவில் தைப்பூச பால் குட ஊர்வலம்

## ஏராளமான பக்தர்கள் காவடி எடுத்து நேர்த்திக்கடன்



**தர்மபுரி,பிப்.5-**

தர்மபுரி குமாரசாமிப்பேட்டை சிவசுப்பிரமணிய சாமி கோவில் தைப்பூச தேர் திருவிழாவையொட்டி பால் குட ஊர்வலம் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு காவடி எடுத்தும், அழகு குத்தியும் நேர்த்திக்கடன் செலுத்தினர்.

**தைப்பூச திருவிழா**

தர்மபுரி குமாரசாமிப்பேட்டை சிவசுப்பிரமணிய சாமி கோவில் தைப்பூச தேர்த்திருவிழா கடந்த 30-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவையொட்டி சுவாமி நிலத்தில் புற்றுமுன் எடுத்தலும், கணபதி பூஜை, யாகசாலை பூஜைகளுடன் சாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை மற்றும் வழிபாடுகள் நடைபெற்றது. பின்னர் சாமிக்கு சிறப்பு அலங்கார சேவையும், மகா தீபாராதனையும் நடைபெற்றது. இதை தொடர்ந்து தினமும் சாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை வழிபாடும், பல்வேறு வாகனங்களில் சாமி திருவீதி உலாவும் நடைபெற்றது.

தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு நேற்று காலை தர்மபுரி சாலை விநாயகர் கோவிலில் இருந்து பால் குட ஊர்வலம் நடைபெற்றது, மேளதாளங்கள் முழங்க நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அழகு குத்தியும், காவடி எடுத்தும் நேர்த்திக்கடன் செலுத்தினர். இந்த ஊர்வலம் எஸ்.வி. ரோடு, கடைவீதி, பென்னாகரம் ரோடு வழியாக கோவிலை வந்தடைந்தது. தொடர்ந்து கோவிலில் சாமிக்கு பால் அபிஷேகமும், சிறப்பு வழிபாடு மற்றும் மகா தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து இரவு சாமி திருக்கல்யாண உற்சவமும், பொன்மயில் வாகனத்தில் சாமி திருவீதி உலாவும் நடைபெற்றது. இன்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு விநாயகர் தேரோட்டமும், யானை வாகன உற்சவமும் நடக்கிறது.

**பெண்கள் மட்டும் வடம் பிடிக்கும்**

விழாவின் முக்கிய நாளான வருகிற நாளை (திங்கட்கிழமை) சிவசுப்பிரமணிய சாமி கோவில் தைப்பூச தேரோட்டம் நடக்கிறது. காலை 6 மணிக்கு பெண்கள் மட்டும் வடம் பிடிக்கும் தேரோட்டமும், மாலை 4 மணிக்கு வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தேரோட்டமும் நடக்கிறது. விழாவையொட்டி நாளை காலை 7 மணிக்கு பாரிமுனை நண்பர்கள் மற்றும் வாரியார் அன்னதான அறக்கட்டளை சார்பில் 10000 பக்தர்களுக்கு சிற்றுண்டி வழங்கும் விழாவும், மாலை 6 மணிக்கு ஏழைகள் அன்னதான கமிட்டி சார்பில் 10000 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் விழாவும் நடக்கிறது. விழாவையொட்டி பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடக்கிறது.

வருகிற 7-ம் தேதி வேடர் பறி குதிரை வாகன உற்சவமும், 8-ம் தேதி விழா கொடியிறக்கம் மற்றும் பூப்பல்லக்கு உற்சவமும், 10-ம் தேதி சயன உற்சவமும் நடக்கிறது. விழாவையொட்டி பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் உதயகுமார், செயல் அலுவலர் ராதாமணி மற்றும் செங்குந்தர் சமூகத்தினர், விழா குழுவினர் செய்து வருகிறார்கள்.

### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில்

# அனைத்து ஊராட்சி மன்ற தலைவர்களுக்கான ஊராட்சி நிர்வாகம், திட்ட செயலாக்கம் தொடர்பான கலந்தாய்வு கூட்டம்

## கலெக்டர் ஸ்ரேயா பி.சிங் தலைமையில் நடந்தது




**நாமக்கல்,பிப்.5-**

நாமக்கல்லில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் அனைத்து ஊராட்சி மன்ற தலைவர்களுக்கான ஊராட்சி நிர்வாகம் மற்றும் திட்ட செயலாக்கம் தொடர்பான கலந்தாய்வு கூட்டம் கலெக்டர் ஸ்ரேயா பி.சிங், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலெக்டர் பேசும் போது தெரிவித்ததாவது: ஊராட்சி மன்ற தலைவர்கள் தங்கள் ஊராட்சியில் உள்ள வீடுகள், குடிநீர் தொட்டிகள், குடிநீர் இணைப்புகள் உள்ளிட்ட விவரங்களை நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். ஊராட்சி மன்ற தலைவர்கள் தங்கள் ஊராட்சியில் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளை மேற்கொண்டு மற்ற ஊராட்சிகளுக்கு முன்னுதாரணமாக திகழும் வகையிலும், பொதுமக்களிடம் நன்மதிப்பு கிடைக்கப்பெறும் வகையிலும் செயல்பட வேண்டும். பொதுமக்களுக்கு சுத்தமான சுகாதாரமான குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருந்தால் அதன் முழு விவரங்களையும் அறிந்து வைத்திருக்க வேண்டும். தேவைபடாத இடங்களில் தெருவிளக்கு, செயல்படாத ஆழ்துளை கிணறு ஆகியவற்றின் மின் இணைப்பு முற்றிலுமாக துண்டித்து தேவையற்ற செலவினங்களை குறைத்திட வேண்டும்.

எந்தவொரு திட்டத்திற்காவும் இடத்தினை தேர்வு செய்யும் போது ஊராட்சிக்கு சொந்தமான இடமாக அல்லது வருவாய்த்துறைக்கு சொந்தமான இடமாக இருப்பதை உறுதி செய்திட வேண்டும். தனிநபர் இடமாக இருந்தால் முறையான அனுமதி பெற்று பணிகளை தொடங்கிட வேண்டும். இதுவரை பணிகள் எடுக்கப்பட்டு முடிக்காமல் நிலுவையில் உள்ள பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கலெக்டர் தெரிவித்தார். இக்கூட்டத்தில் கிராம ஊராட்சிமன்றத் தலைவர்கள் ஆற்ற வேண்டிய பணிகள், கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள், மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள், குடியரசு தினம் மற்றும் கிராம சபைக் கூட்டம் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் ஆகியவை குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சிவக்குமார், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) .பிரியா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கலையரசு, ஆகியோர் உட்பட வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் கலந்து கொண்டனர்.

### தர்மபுரிமாவட்டத்தில்வருகிற13ந்தேதி

# தட்சணகாசி காசி காலபைரவர் கோயில் தேய்பிறை அஷ்டமி

**தர்மபுரி,பிப்.5-**

அருள்மிகு ஸ்ரீ தட்சணகாசி காசி காலபைரவர் திருக்கோயில் அதியமான் கோட்டை தர்மபுரி மாவட்டம் வருகின்ற 13.2.2023 திங்கட்கிழமை மாசி 1ஆம் நாள் தேய்பிறை அஷ்டமி காலை 5.30மணிக்கு விஸ்வரூப தரிசனம் காலை 6 மணி அளவில் கணபதி ஹோமம் 64 பைரவர் ஹோமம் ஏகாந்த ருத்ர ஹோமம் காலை 8 மணிக்கு கோ பூஜை அஸ்தவ பூஜை காலை 8.30 மணிக்கு பைரவர் உற்சவமூர்த்தி திருக்கோயிலை வளம் வருதல் பைரவருக்கு காலை 9 மணிக்கு 18 வகையான அபிஷேகங்கள் நடைபெறும் சுவாமிக்கு ராஜ அலங்காரம் சிறப்பு தரிசனம் நடைபெறும் 13.2.2023 திங்கட்கிழமை இரவு

இரவு 10 மணிக்கு 1008 கிலோ மிளகாய் 108 கிலோ மிளகு சத்ரு சம்ஹார யாகம் நடைபெறும் 64 பைரவர் யாகம் மகா குருதி பூஜை இரவு 3 மணிக்கு பைரவர் சுவாமி பல்லாக்கில் திருக்கோயிலை வளம் வருதல் அதிகாலை 4 மணி அளவில் 108 லிட்டர் பால் அபிஷேகம் நடைபெறும் கலச அபிஷேகம் சுவாமிக்கு சத்ரு சம்ஹாரம் அலங்காரம் செய்யப்படும் சதுர்வேத பாராயணம் சிறப்பு தரிசனம் நடைபெறும் அது சமயம் அனைத்து பக்த கோடிகளும் வந்து சுவாமி ஸ்ரீ தட்சணகாசி காலபைரவர் திருவருளைப் பெற அன்புடன் அழைக்கிறோம்

### தருமபுரி மாவட்டத்தில்

# முழுநேர நியாய விலைக்கடை: எம்எல்ஏ திறந்து வைத்தார்



**தருமபுரி,பிப்.5:**

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள பகுதிநேர நியாய விலைக்கடையை முழுநேர கடையாக மாற்றியமைத்து கடையை தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேஷ்வரன் திறந்து வைத்தார். பின்னர், கூட்டுறவு கடன் சங்கம் மூலம் பொதுமக்களுக்கு கடன் வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்று பொதுமக்களுக்கு கடன் வழங்கி விழாவை தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து, தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியில் சாமிசெட்டிப்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் கூட்டுறவு சங்கத்தின் இணை பதிவாளர், துணை பதிவாளர், கூட்டுறவு சங்க செயலாளர், கூட்டுறவு சங்க தலைவர், துணை தலைவர், ஊராட்சி மன்ற தலைவர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், பாமக மாநில செயற்குழு உறுப்பினர் பெ.பெரியசாமி, மாநில அமைப்பு செயலாளர் ப.சண்முகம், மாவட்ட துணை செயலாளர் த.காமராஜ், கூட்டுறவு சங்க இயக்குநர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் பலர் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.

# பச்சியப்பன் கொட்டாய் அரசு பள்ளியில் ஆண்டு விழா நிகழ்ச்சி



**தருமபுரி,பிப்.5:**

தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஒன்றியத்திற்கு உட்பட்டது பச்சையப்பன் கொட்டாய் கிராமம். இந்த கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி செயல்பட்டு 20க்கு மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

இந்த நிலையில் அரசு பள்ளியின் மாணவர்கள் சேர்க்கையை அதிகப்படுத்த தனியார் பள்ளிக்கு நிகரான பள்ளி மாணவர்களின் திறனை மேம்படுத்துதல், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் போன்ற பணிகளை பள்ளி ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகின்றனர். அதனைத் தொடர்ந்து வருடம் வருடம் ஆண்டு விழா நிகழ்ச்சி நடைபெறுவது வழக்கம்.

அதே போன்று நேற்று பள்ளி தலைமை ஆசிரியர் தலைமையில் ஆண்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த ஆண்டு விழா நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக வந்த பாகல்அள்ளி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ரம்யாகுமார் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் 15க்கு மேற்பட்ட பாடல்கள் மற்றும் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பள்ளி மாணவர்கள் செல்போன் பற்றிய நன்மை, தீமைகள் குறித்து எடுத்துக் கூறினார். இந்த நிகழ்ச்சியில் ஆசிரியர் ஆனந்தி மற்றும் இருபால் ஆசிரியர்கள், பொதுமக்கள் என 100க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### பர்கூர் தொகுதியில்

# ரூ.80 லட்சம் மதிப்பீட்டில் பள்ளி கட்டிடங்களுக்கு பூமி பூஜை: தே.மதியழகன் எம்எல்ஏ துவக்கி வைத்தார்



**கிருஷ்ணகிரி,பிப்.5 -**

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதி புளியம்பட்டி ஊராட்சி, போச்சம்பள்ளி ஊராட்சி ஆகிய ஊராட்சியில் உள்ள புளியம்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட சுண்டக்காபட்டி கிராமத்தில் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் சார்பில் ரூ.30,75 லட்சம் மதிப்பீட்டிலும், முல்லை நகரில் சாக்கடை கால்வாய் அமைக்க ரூ,9.95 லட்சம் மதிப்பீட்டிலும், ஜம்பு குட்டப்பட்டி பள்ளி கட்டிடம் கட்ட ரூ. 30.45 லட்சம் மதிப்பீட்டிலும் திட்ட வளர்ச்சி பணிகளுக்கு பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் எம்எல்ஏ பூமி பூஜையை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.ஆர். ரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், போச்சம்பள்ளி ஊராட்சி மன்ற தலைவர் சாந்த மூர்த்தி, ஒன்றிய குழு உறுப்பினர் சுகுணா அம்மன் ராஜா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அர்ஜுனன், காங்கிரஸ் மாவட்ட துணைத் தலைவர் விவேகானந்தன், ஆசிரியர்கள் புளியம்பட்டி ஆசிரியர் குமார், சுண்டக்காப்பட்டி ஆசிரியர் சுதாகர், புஷ்பா உள்பட ஊர் பொது மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நெமிலி ஒன்றிய திமுகவினர் அண்ணா சிலைக்கு மரியாதை




**அரக்கோணம் பிப்5**

திமுகவின் மூத்த தலைவர் களில் ஒருவர் மறைந்த பேரறிஞர் அண்ணா இவரது 54வது ஆண்டு நினைவு தினம் தமிழகமெங்கும் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கபட்டது. அவற்றில் ராணிபேட்டை மாவட்டம், நெமிலி நகரிலும் சிறப்பாக அனுஷ்டிக்கபட்டது . இதற்காக ஒன்றிய செயலாளர் களான கிழக்கு செயலாளர் பெ. வடிவேலு, மத்திய செயலாளர் எஸ் ஜிசி. பெருமாள் மற்றும் மேற்கு செயலாளர் ஆர்பி ரவீந்திரன் ஆகியோர் ஒன்று சேர்ந்து அண்ணா விற்கு மரியாதை செலுத்தினர். முன்னதாக அமைதி பேரணியாகவும், தொடர்ந்து அண்ணா, பெரியார் மற்றும் அம்பேத்கரின் முழு உருவ சிலைகளுக்கு மாலை அணிவித்தனர். மாவட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர் சுந்தரம்மாள், மற்றும் நரசிம்மன், செல்வம், வக்கீல்கள் முரளி, வெங்கடேசன், உள்ளிட்ட திரளானவர்களும் கலந்து கொண்டனர். இது போல்

அரக்கோணம் நகரில் பழைய நகராட்சி கட்டிடத்தில் அமைந்துள்ள அண்ணா சிலைக்கு முன்னாள் நகர துணை செயலாளர் மணி தலைமையில் மரியாதை செலுத்த பட்டது. முன்னாள் நிர்வாகி விக்ரமன், முன்னாள் நகர மன்ற தலைவர் ராஜா, முன்னாள் கவுன்சிலர் மீனாட்சி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் தமிழரசன் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் எஸ்.இந்திரன்குமார், எஸ். குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி




**ராசிபுரம், பிப்.5:**

உலக புற்றுநோய் தினமான மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு ராசிபுரம் ரோட்டரி சங்கம் இந்திய மருத்துவக் கழக ராசிபுரம் பிரிவு ராசிபுரம் அரசு மருத்துவமனை ராசிபுரம் இன்னர் வீல் கிளப் ராசிபுரம் வாசவி வனிதா கழகம் திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி ரோட்ராக்ட் மாணவர்கள் கல்லூரியின் என்.சி.சி. மாணவர்கள் இராசிபுரம் அரசு மருத்துவமனை செவிலியர்கள் மற்றும் பயிற்சி செவிலியர்கள் ஆகியோரை கொண்ட ஊர்வலம் அரசு மருத்துவமனையில் துவங்கியது. இப்பேரணி பெரிய கடை வீதி வழியாக சென்று அண்ணாசாலை கச்சேரி ரோடு வழியாக ராசிபுரம் அரசு மருத்துவமனையினை மீண்டும் வந்தடைந்தது.

இந்த ஊர்வலத்தில் ராசிபுரம் மருத்துவர்கள் சங்கத் தலைவர் டாக்டர் செந்தில்குமார் செயலாளர் டாக்டர் துபாய் சுந்தர் ரமேஷ் பொருளாளர் டாக்டர் செந்தில்குமார் மகளிர் பிரிவு தலைவர் டாக்டர் சித்ரா செயலாளர் ஹேமலதா முன்னாள் தலைவர்கள் டாக்டர் ஜெயலட்சுமி சுகந்தி ராசிபுரம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவ அலுவலர் ஜெயந்தி குழந்தைகள் பிரிவு டாக்டர். கலைச்செல்வி ரோட்டரி மாவட்ட உதவி ஆளுநர் அம்மன் ரவி ராசிபுரம் ரோட்டரி சங்கத் தலைவர் கே.எஸ்.கருணாகர பன்னீர்செல்வம் செயலாளர் ஜி.ராமலிங்கம் பொருளாளர் தனபால் சாலை பாதுகாப்பு திட்டசேர்மன் சுரேந்தர்ன் முன்னாள் தலைவர்கள் டாக்டர் ராமகிருஷ்ணன் என்.பி.ராமசாமி மோகன் ரங்கராஜன் சிட்டி வரதராஜன் எல்.சிவகுமார் குணசேகர் சி.கே.சீனிவாசன் லட்சுமிபதி சார்ஜண்ட் அட் ஆர்ம்ஸ் பி.கே.ராஜா வெங்கடாஜலபதி லட்சுமி நரசிம்மன் இன்னர்வீல் சங்கத் தலைவி தெய்வானை ராமசாமி செயலாளர் சரோஜா பொருளாளர் சுகன்யா நந்தகுமார் ராசிபுரம் வாசவி வனிதா கிளப் தலைவர் லட்சுமி பிரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

### முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டி

# தருமபுரி எம்எல்ஏ எஸ்பி.வெங்கடேஸ்வரன் தொடங்கி வைத்தார்



**தருமபுரி,பிப்.5:**

தருமபுரி மாவட்ட விளையாட்டு மைதானத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்பட்ட மாவட்ட அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் இந்த விளையாட்டு போட்டியில் அரசு மற்றும் தனியார் பள்ளியில் அளவிலான போட்டிகள் நடைபெற்றது. இதில் தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஷ்வரன் சிறப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்டு மூன்றாம் நாள் நடைபெற்ற போட்டிகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட விளையாட்டு நல அலுவலர் சாந்தி, உடற்கல்வி ஆசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், பள்ளி, மாணவ, மாணவிகள் உடனிருந்தனர்.

தின பூமி நாளிதழ் படியுங்கள்

# தி.மலை அரசு மேல்நிலை பள்ளி ஆண்டு விழா

## பள்ளி மாணவர்களுக்கு பரிசு

**திருவண்ணாமலை பிப்.5 -**

திருவண்ணாமலை தியாகி நா.அண்ணாமலை பிள்ளை அரசு மேல்நிலைப் பள்ளியில் 52வது ஆண்டு விழா மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் து.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) கி.காளிதாஸ், பள்ளி தலைமை ஆசிரியர் பா.ஜெயக்குமாரி ஆகியோர் முன்னலை வகிக்க. பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ஏ.ஏ.ஆறுமுகம் அனைவரையும் வரவேற்றார். விழாவில் கலைநிகழ்ச்சியில் பங்குபெற்ற மாணவ மாணவிகளுக்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சின்னதிரை நடிகர்கள் டி.சித்து, ஸ்ரேயா அஞ்சன் ஆகியோர் பரிசுகள் மற்றும் விருதுகள் வழங்கி பேசுகையில் திருவண்ணாமலை தியாகி நா.அண்ணாமலை பிள்ளை அரசு மேல்நிலைப் பள்ளி 52வது ஆண்டு விழாவில் தனியார் பள்ளிக்கு நிகராக அரசு பள்ளியில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது

அரசு பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளின் நல்ல நிலையில் உள்ளார்கள், இவர்களை இன்னும் ஊக்கப்படுத்தும் விதமாக சிறப்பு பயிற்சியும் பல நிகழ்ச்சிகளும் நடத்த வேண்டும் என்றனர் இந்த விழாவையட்டி தேசிய விருது பெற்ற சார்லி சாப்லின் ஆப் இந்தியா யோனாவின் மேஜிசோ நிகழ்ச்சியும் நடைபெற்றது.

# ஈரோடு கிழக்கு தொகுதியில் போலி வாக்காளர்கள் சேர்க்கப்படவில்லை: அமைச்சர் செந்தில் பாலாஜி பேட்டி



ஈரோடு,பிப்.05-

ஈரோடு வீரப்பன்சத்திரம் காவிரிரோட்டில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனுக்கு ஆதரவு தெரிவித்து தமிழக மின்சாரத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது கூறியதாவது:-

தமிழக முதல்-அமைச்சரின் ஆதரவுடன் இந்த இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மகத்தான வெற்றி பெறுவார். ஈரோடு கிழக்கு தொகுதியில் 50 ஆயிரம் போலி வாக்காளர்கள் உள்ளதாக எதிர் அணியில் இருப்பவர்கள் கருத்துகளை கூறி வருகின்றனர். கடந்த 2021-ம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலில் இதே தொகுதியில் 2 லட்சத்து 26 ஆயிரத்து 936 வாக்காளர்கள் உள்ளனர். கடந்த ஜனவரி மாதம் 5-ந் தேதி மாவட்ட கலெக்டரால் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின்படி 2 லட்சத்து 26 ஆயிரத்து 876 வாக்காளர்கள் இருக்கிறார்கள். சுமார் 60 வாக்காளர்கள் நீக்கப்பட்டு உள்ளனர். எனவே போலி வாக்காளர்கள் சேர்க்கப்படவில்லை.

கடந்த தேர்தலில் எவ்வளவு வாக்குகள் இருந்தது. இந்த தேர்தலில் எவ்வளவு வாக்கு வித்தியாசம் உள்ளது என்பது தெரியாமல் பேசுகிறார்கள் எதிர்க்கட்சியினர் நாங்கள் அடைய உள்ள வெற்றியை ஏற்றுக்கொள்ள முடியாமல் இப்போதே அவர்களது தோல்வியை ஒப்புக்கொள்வதற்காக இந்த கருத்துகளை முன் வைக்கிறார்கள்.எங்களது வேட்பாளர் வேட்புமனு தாக்கலின் போது கூட தேர்தல் விதிமுறையின்படி 5 பேருடன் சென்று தான் வேட்புமனு தாக்கல் செய்தார். இந்த தேர்தல் என்பது நேர்மையாகவும், நியாயமாகவும், வெளிப்படையாகவும் நடந்து வருகிறது.இவ்வாறு அமைச்சர் செந்தில் பாலாஜி கூறினார். இந்த பேட்டியின் போது வேட்பாளர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் வீரப்பன்சத்திரம் பகுதி கழக செயலாளர் வி. சி நடராஜன் உடனிருந்தார்.

# ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் விருந்தினர் விரிவுரை

ஈரோடு பிப்.05-

கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மத்திய அரசின் உயிரி தொழில் நுட்பத்துறையின் கீழ்நட்சத்திர அந்தஸ்து பெற்ற இளங்கலை கணினி அறிவியல் துறையின் சார்பில் மின்னணுமூலம் சந்தைப்படுத்துதல் என்ற தலைப்பில் விருந்தினர் விரிவுரை நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக ஈரோடு, டிஜிட்டல் மார்க்கெட்டிங் எக்ஸிக்யூடிவ் ஐ பி சி எஸ் குளோபல் சொல்யூஷன் பிரைவேட் லிமிடெட் செல்வி பி ரேவதி கலந்து கொண்டு மின்னணுமூலம் சந்தைப்படுத்துதல் பற்றிய தலைப்பில் விரிவுரையை நிகழ்த்தினார். இதில் கணினி அறிவியல் துறையைச் சேர்ந்த இறுதியாண்டு மாணவ மாணவிகள் கலந்துகொண்டு பொருட்களை மின்னணுமூலம் எவ்வாறெல்லாம் சந்தைப்படுத்தலாம். மற்றும் எவ்வாறு லாபம் ஈட்டலாம் என்பதைப் பற்றியும் தகவல் பரிமாற்றம் எவ்வாறு செய்வது என்பதையும் கற்றுக்கொண்டனர் மேலும் தகவல் தொடர்பு உத்திகளை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்பது பற்றியும், இந்த பயிற்சியை கற்றுக் கொண்டால் எவ்வாறு வேலை வாய்ப்பு பெறலாம்

என்பதை குறித்தும் அவர் மிகச் சிறப்பாக விளக்கி கூறினார். இக்கருத்தரங்கம் தாளாளர் பி.டி தங்கவேல் தலைமையிலும், முதல்வர் முனைவர் என். ராமன் முன்னிலையிலும், கணினித் துறைதலைவர்.பி.ரமேஷ், உதவி பேராசிரியர் மேற்பார்வையிலும் சிறப்பாக நடைபெற்றது. இதில் சுமார் 120 இளங்கலை கணினி அறிவியல் துறை மூன்றாம் ஆண்டு மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இளங்கலை கணினி அறிவியல் துறை உதவி பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

# ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தல் தொடர்பாக புகார்களை கட்டணமில்லா தொலைபேசி வாயிலாக தெரிவிக்கலாம்

## மாவட்ட தேர்தல் அலுவலர் ஹெச்.கிருஷ்ணனுண்ணி தகவல்

ஈரோடு,பிப்.05-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தல் தொடர்பாக பொதுமக்கள் ஏதேனும் புகார்களை தெரிவிக்க ஈரோடு மாநகராட்சி மைய அலுவலகத்தில் செயல்படும் தேர்தல் கட்டுப்பாட்டு மையத்தில் 1800-425-94890 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாக தெரிவிக்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர், கலெக்டர் ஹெச்.கிருஷ்ணனுண்ணி தெரிவித்தார்.

இந்திய தேர்தல் ஆணையம், நடைபெறவுள்ள 98 - ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தல் 2023-ல் தேர்தல் நடத்தை விதி மீறல் தடுப்பு மற்றும் தேர்தல் செலவினம் குறித்து கண்காணிக்கும் செய்ய பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு மற்றும் வீடியோ கண்காணிப்புக் குழு ஆகிய வற்றை அமைத்து தேர்தல் நடத்தை விதிகள் அமுல் செய்யப்பட்ட நாள் முதல் கண்காணிப்பு பணி மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளது. மேற்கண்ட குழுக்கள் கண்காணிக்கையில் பறக்கும் படை, மற்றும் நிலையான கண்காணிப்புக் குழு வாகனங்களில் ஜிபிஎஸ் (புPஎஸ்) கருவிகள் பொருத்தி, அவர்களது நிலைகளை கண்டறிய, கட்டுப்பாட்டு அமைக்கவும் இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. இதையடுத்து, ஈரோடு மாவட்டத்தில், தேர்தல் நடத்தை விதிகள் அமுல் செய்த நாள் முதல் பறக்கும் படை, மற்றும் நிலையான கண்காணிப்புக் குழு ஆகியன அமைக்கப்பட்டு கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி வாகனங்களில் ஜிபிஎஸ் கருவிகள் பொருத்தப்பட்டு அவர்களது நிலை மற்றும் பயண விபரங்கள் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையிலிருந்து 24 மணி நேரம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், ஈரோடு மாநகராட்சி அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறையில், தேர்தல் நடத்தை விதி மீறல் குறித்த புகார்களை கட்டணமில்லா தொலைபேசி எண்: 1800 425 94980 மூலம் தெரிவிக்க இணைப்புகள் வழங்கப்பட்டு கடந்த 20.01.2023 முதல் செயல்பட்டு வருகிறது.

எனவே, ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தல்-2023 தொடர்பான புகார்களை மேற்படி கட்டணமில்லா தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். மேலும், தேர்தல் நடத்தை விதிமீறல் தொடர்பாக இதுவரை சுமார் 122 புகார்கள் பெறப்பட்டு அதற்கு 115 புகார்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் கலெக்டர் ஹெச். கிருஷ்ணனுண்ணி தெரிவித்துள்ளார்.

# கூடலூர், பந்தலூர் பகுதிகளில் நாளை மின் விநியோகம் நிறுத்தம்

ஊட்டி, பிப்.05-

கூடலூர், பந்தலூர் பகுதிகளில் நாளை மின் விநியோகம் நிறுத்தப்படுவது குறித்து நீலகிரி மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர்(பொ) எஸ்.வில்வராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:-

**உப்பட்டி, சேரம்பாடி**

உப்பட்டி, சேரம்பாடி, கூடலூர் துணை மின் நிலையங்களில் நாளை (6-ந் தேதி) காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால் இப்பகுதிகளை உள்ளடக்கிய இடங்களில் மின் விநியோகம் இருக்காது.அதன்படி உப்பட்டி துணை மின் நிலையத்தைச் சார்ந்த உப்பட்டி, பொன்னானி, தேவாலா, பந்தலூர், அத்திக்குன்னா, கொளப்பள்ளி, எல்லமாலா, நாடுகாணி, குந்தலாடி, ராக்வுட், அய்யன்கொல்லி, வுட் ப்ரோ மற்றும் நம்பர் 3 டிவிசன் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய இடங்களிலும், சேரம்பாடி துணை மின்நிலையத்தைச் சார்ந்த சேரம்பாடி டவுன், கன்னம்வயல், நாயக்கன்சோலை, கையுன்னி, எருமாடு, தாளூர், பொன்னச்சேரி, கக்குண்டி, சோலாடி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய இடங்களிலும்,

**கூடலூர்**

கூடலூர் துணை மின் நிலையத்தைச் சார்ந்த கூடலூர், நந்தட்டி, சூண்டி, மரப்பாலம், செம்பாலா, ஓவேலி, 1-வது மைல், 2-வது மைல், காந்திநகர், முதுமலை, அத்திப்பள்ளி, தொரப்பள்ளி, பாடான்துறை, ஸ்ரீமதுரை, மண்வயல், தெப்பக்காடு, பாட்டவயல், நெலாக்கோட்டை, கார்குடி, தேவர்சோலா ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய இடங்களிலும் மின் விநியோகம் இருக்காது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சிவப்பிரசாத் தேர்தல் நடத்தும் அலுவலர் சிவக்குமாரிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்த போது எடுத்த படம்

# ஊட்டி ஜெ.எஸ்.எஸ். பார்மசி கல்லூரியில் பொங்கல் பண்டிகை



ஊட்டி, பிப்.05-

ஊட்டியில் அமைந்துள்ள ஜெ.எஸ்.எஸ் மருந்தாக்கியல் கல்லூரியில் தேர்விற்கு பின் பொங்கல் பண்டிகையை மாணவ, மாணவியர்கள், ஆடிப்பாடி கொண்டாடி மகிழ்ந்தனர்.

தமிழர்களின் பாரம்பரிய பண்டிகையான பொங்கல் பண்டிகை ஊட்டியில் அமைந்துள்ள ஜெ.எஸ்.எஸ் மருந்தாக்கியல் கல்லூரியில் நேற்று கோலாகலமாக நடைபெற்றது. கடந்த 20 நாட்களாக கல்லூரியில் செமஸ்டர் தேர்வுகள் நடைபெற்று வந்த நிலையில் தேர்வுகள் நிறைவு பெற்ற பின் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.பி.தனபால், முதன்மை அதிகாரி.பசவண்ணா மற்றும் பேராசிரியர்கள் இணைந்து பொங்கல் விழாவை தொடங்கி வைத்தனர்

இதில் மாணவ, மாணவியர்கள் தமிழர்களின் பாரம்பரிய கலாச்சாரம் உடை அணிந்து கல்லூரி வளாகத்தின் முன்பு பேராசிரியர்களுடன் புது பானையில் பொங்கல் வைத்து சூரிய பகவானை வழிபட்டனர்.கல்லூரி பேராசிரியர்களுடன் தமிழர்களின் பாரம்பரிய கலாச்சார உடை அணிந்து புது பானையில் பொங்கல் வைத்து நடனங்கள் ஆடி பொங்கல் பண்டிகை உற்சாகமாக கொண்டாடி மகிழ்ந்தனர்...பின்பு புது பானையில் பொங்கி வரும் போது பொங்கலோ பொங்கல் என கூறி பொங்கல் வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டும் தமிழர்களின் பாரம்பரிய இசையான பறை இசையுடன் மாணவ மாணவியர்கள் உற்சாகமாக நடனமாடி பொங்கல் பண்டிகையை கொண்டாடி மகிழ்ந்தனர். அனைவருக்கும்; அறுசுவை உணவு பரிமாரபட்டது மாண வ.மா ண வி க ளின் தனித்திறமையை வெளிப்படுத்தும் தமிழர் விளையாட்டான கபடி ,உரியடி உள்ளிட்ட போட்டிகளும்; நடைபெற்றன

# ஊட்டி ஏரிக்கு 13 வகையான வெளிநாட்டு பறவைகள் வருகை: கண்காணிப்பு பணிகள் தீவிரம்

ஊட்டி, பிப்.5-

நீலகிரியில் அதிகபட்சமாக ஊட்டி ஏரிக்கு 13 வகையான வெளிநாட்டு பறவைகள் வருகை கண்டுபிடிக்கப் படடுள்ளதால் அவற்றை கண்காணிக்கும் பணியில் தீவிரம் காட்டப்பட்டுள்ளது..

தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த ஈர நில பறவைகள் கணக்கெடுப்பு, ஏரிகள் மற்றும் குளங்களில் நடைபெற்றது. கணக்கெடுப்புக்கு முந்தைய நாள் கல்லூரி மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நீலகிரி வன கோட்டத்தில் 14 இடங்களில் சுமார் 30 தன்னார்வலர்கள், பறவைகள் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டனர்.

இதில் நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி படகு இல்ல ஏரியில் பறவைகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது தெரிய வந்தது. இதேபோல் மார்லிமந்து, வெலிங்டன், எமரால்டு பகுதியிலும் பறவைகள் அதிக அளவில் இருந்தன. இதுகுறித்து வனத்துறை அலுவலர் மற்றும் பறவை ஆர்வலர்கள் கூறியதாவது:-

சதுப்பு நிலங்களில் மட்டும் நடந்த இந்த பறவைகள் கணக்கெடுப்பில் நீலகிரியில் 35 வகையான பறவை இனங்கள் மற்றும் 900-க்கும் மேற்பட்ட பறவைகள் இருப்பது தெரியவந்துள்ளது. இதில் ஊட்டி படகு இல்லத்தில் மட்டும் 26 வகை பறவை இனங்கள் மற்றும் 600 பறவைகள் காணப்பட்டன. இதில் ஆற்று உள்ளான் தட்டை வாயன் உள்பட 13 வகையான பறவைகள் வெளிநாட்டை சேர்ந்தவைகள் என்பது சிறப்பம்சமாகும். குறிப்பாக இங்கு 6 வகையான வாத்து இனங்கள் அடையாளம் காணப்பட்டதில், 5 வகை வாத்து இனங்கள் வெளிநாட்டை குறிப்பாக ஐரோப்பிய பகுதியை சேர்ந்தவையாகும்.

தற்போது ஐரோப்பா முழுவதும் கடுமையான பனி நிலவுவதால் அவை உணவு மற்றும் ஈர நிலங்களுக்காக இந்த இடத்தை தேடி வந்துள்ளன. இவை இங்கு 6 மாதம் தங்கி இருந்து மீண்டும் செல்லும்.

படகு இல்ல குளத்தில் பறவைகள் அதிக அளவில் இருக்க முக்கிய காரணம், அந்நிய நாட்டு மீன்கள் இங்கு அதிகம் உள்ளது. மேலும் ஆகாய தாமரை இருக்கிறது. இதேபோல் நீர் பறவைகள் பொதுவாக அதிக ஆழம் கொண்ட பகுதிகளை விரும்பாது, ஊட்டி ஏறி மிதமான ஆழம் கொண்ட பகுதியாகும். இந்த நிலையில் அதிகரித்து வரும் மக்கள் தொகை காரணமாக ஊட்டி ஏரி அதிகமாக மாசுபடும் சூழ்நிலை இருந்தாலும், மாவட்டத்தில் அதிக அளவில் பறவைகள் இருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே ஊட்டி கோடப்பமந்து கால்வாயில் இருந்து வரும் கழிவு நீர் அதிக அளவில் மாசுபட்டால் ஊட்டி ஏரியின் சுற்றுச்சூழல் தன்மை பாதிப்பு ஏற்படும். இதனால் இந்த பறவை இனங்களின் எண்ணிக்கை குறைய வாய்ப்புள்ளது.எனவே இது பாதுகாக்கப்பட்ட ஈரநிலமாக அறிவிக்கப்பட வேண்டும், இங்கு பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்கும் வகையில், நீர் சுத்திகரிப்பு பணிகளில் கூடுதல் தொழில் நுட்பங்களை கொண்டு வர வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

இதுகுறித்து மாவட்ட வன அலுவலர் கவுதம் கூறுகையில், சமவெளி மற்றும் குறைந்த உயரத்தில் உள்ள ஈரநிலங்களைக் காட்டிலும் மலை ஈரநிலங்களில் பறவைகளின் பல்லுயிர்ப் பெருக்கம் கணிசமாகக் குறைவாக இருக்கிறது. வரும் ஆண்டுகளில், குளிர் கால மாதங்களில், வனத்துறையினர், ஏரிகள் மற்றும் நீர் நிலைகளில் வசிக்கும் பறவையினங்கள் மற்றும் உயிரினங்களை தொடர்ந்து கண்காணிக்கும் பணிகள் தீவிர படுத்தப்படும் என்றார்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

கோவை மாவட்டத்தில்

# தமிழ்க் கனவு -தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்ச்சி: அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் நடைபெற்றது



கோவை,பிப்.05-

கோயம்புத்தூர் மாவட்டத்தில் மாபெரும் தமிழ்க் கனவு - தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்ச்சி தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் நடைபெற்றது.

கோயம்புத்தூர் மாவட்டம், பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரியில் மாபெரும் தமிழ்க் கனவு - தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்ச்சி தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் மு.பிரதாப் மருத்துவர் கு.சிவராமன், பி.எஸ்.ஜி கல்லூரி முதல்வர் து.பிருந்தா, கல்லூரி செயலர் முனைவர் தி.கண்ணையன், மாவட்ட கல்லூரி கல்வி இணை இயக்குநர் கலைச்செல்வி உட்பட அரசு அலுவலர்கள், துறை தலைவர்கள், துறை பேராசிரியர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.இந்நிகழ்ச்சியில் தமிழர் மரபின் தொன்மை என்ற தலைப்பில் தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களும், தமிழர் உணவு – நோய் நீக்க நலம் காக்க என்ற தலைப்பில் மருத்துவர் கு.சிவராமன் அவர்களும் உரையாற்றினார்கள்.இந்நிகழ்ச்சியில் தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பேசும் போது தெரிவித்ததாவது-

தமிழர் மரபின் தொன்மை என்ற தலைப்பில் உயரிய வாழ்வின் தத்துவத்தையும், வாழ்வியல் நெறிகளையும் ஒன்றரை வரிகளில் சொல்லக்கூடிய ஆற்றல் அன்றைய தினம் வள்ளுவர் அவர்களுக்கு இருந்தது. இன்றைக்கு எவ்வளவு பெரிய விஷயமாக இருந்தாலும் அதனை தொழில்நுட்ப ரீதியாக நவீன வடிவிலான நுண் கருவி (CHIP) –க்குள் அடக்கிவிட முடிகிறது. 2000 ஆண்டுகளுக்கு மேலாக விரிந்து இருக்கின்ற தமிழ் சங்க தொன்மை மரபினை சிறிய தாக கூறிவிடமுடியாது. தமிழர் மரபு, தமிழ், தொன்மை உள்ளிட்டவைகளுக்கு நீண்ட பாரம்பரியம் உள்ளது. 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழ் மொழிக்கு என்று சிறப்பு இருந்தது, தமிழருக்கு என்று நாகரிகம் இருந்தது என்று எடுத்துகாட்டக்கூடிய பல்வேறு தரவுகள் தமிழ்நாட்டில் இருந்தது. கீழடி, ஆதித்த நல்லூர் உள்ளிட்ட இடங்களில் அகழ்வாராய்ச்சிகள் நடக்கின்றதோ அங்கெல்லாம் அற்புதமாக தரவுகள் நமக்கு கிடைக்கின்றது. தமிழுக்கு ஒரு சிறப்பு என்னவென்றால் அதாவது தமிழில் எந்த சொல்லை எடுத்துக்கொண்டாலும் அச்சொல்லுக்கான இலக்கணம் உண்டு.தமிழ் தனக்கான இலக்கணத்தை சொல்லாக இருந்தாலும், யாப்பாக இருந்தாலும், அணியாக இருந்தாலும் அதற்கான இலக்கணத்தை சொல்லக்கூடிய தமிழ், வாழ்வியல் நெறி முறைகளுக்கு இலக்கணத்தையும் தமிழ் நமக்கு வகுத்து தந்துள்ளது. தமிழ்நாடு இன்றைக்கு உருவானது அல்ல. 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே சிலப்பதிகாரம், புறநானூறு, சங்க தமிழ் இலக்கியங்கள் என சங்க காலம் தொட்டு ஒரு நிலபரப்பு இருக்கின்றது என்று சொன்னால் அது தமிழ்நாடு தான். மரபு என்ற சொல்லுக்கு கூட இலக்கணம் சொன்னது தமிழ் இலக்கணம். தொன்மை என்பது 100 வருடங்களுக்கு முன்னர் ஒரு பொருள் இருந்தால் அது தொல்பொருள் என்று வரையறுக்கப்படுகின்றது. 2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு இலட்சம் கோடி அமெரிக்க டாலர்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தி கொண்ட பொருளாதாரமாக தமிழ்நாட்டினை உருவாக்குவதே குறிக்கோள் என தமிழ்நாடு முதலமைச்சர் தெரிவித்துள்ளார்கள். இந்த இலக்கை நிர்ணயிக்கக்கூடிய உறுதியான தன்மையை நாம் எங்கே இருந்து பெறுகின்றோம் என்று சொன்னால் 2000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே திரைகடல் ஓடியும் திரவியம் தேடியவர்கள், 2000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே நீங்கள் வசித்த பகுதிகளில் தொழிற்சாலைகள் உருவாக்கியவர்கள், 3000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே இரும்பின் பயன்பாட்டினை முழுமையாக அறிந்திருக்கக்கூடிய பெருமக்கள், அதற்கு முன்னதாகவே உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனம் செய்திருக்கின்ற மக்களாக நாம் இருந்திருக்கின்றோம். நாம் பெற்றிருக்கக்கூடிய இந்த மிக திடமான ஒரு வரலாற்று நோக்கிலே நமக்கு இருக்கிற பலத்தின் அடிப்படையில் தான் தமிழ் சமூகம் வந்திருக்கின்றது. எனவே தான் எதனுடைய அடிப்படையில் நமது எதிர்காலத்தை தீர்மானிக்கிறோம், நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் புரிந்து கொண்டால் தான் நீங்கள் என்னவாக வர முடியும் என்பதை உங்களால் தீர்மானிக்க முடியும். எனவே தான் இந்த தொன்மையும், இந்த தமிழர் மரபும் நமது தமிழ் மொழியின் சிறப்பும் மாணவர்களாக இருக்கக்கூடிய உங்களின் நெஞ்சங்களிலே நீங்காமல் இருக்க வேண்டும் என கேட்டு உரையை நிறைவு செய்கிறேன்.இவ்வாறு தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சியை முன்னிட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் மதிச் சந்தை, பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் நான் முதல்வன் திட்ட விளக்க அரங்கு, முன்னோடி வங்கி சார்பில் கல்வி கடன் உதவி வழங்கும் முகாம், வேலைவாய்ப்பு மற்றும் தொழில் திறன் மேம்பாட்டு துறையின் தொழில் நெறி வழிகாட்டும் முகாம், தொழில் துறையின் சார்பில் தொழில் முனைவோருக்கான திட்டங்கள் பெறுவதற்கான விளக்க அரங்கு, விஜயா பதிப்பகம் மற்றும் வெற்றித் துணைவன் பதிப்பகத்தின் புத்தக அரங்கு ஆகிய அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது. இந்த அரங்குகளை தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி மாணவ, மாணவியர்களின் தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் தொடர்பான கேள்விகளுக்கு தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலளித்தார்.

# கன்று வீச்சு நோய் தடுப்பு முகாம்:அனைத்து கிராமங்களிலும் வரும் 28-ந்தேதி வரை நடக்கிறது

ஊட்டி, பிப்.05-

நீலகிரியில் கன்று வீச்சு நோய் தடுப்பு முகாம் அனைத்து கிராமங்களிலும் வரும்28-ந்தேதி வரை நடக்கிறது. இது குறித்து மாவட்ட கலெக்டர் சா.ப.அம்ரித் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

நீலகிரி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கால்நடை மருத்துவமனை, கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை கிளை நிலையங்களின் மூலம் அனைத்து கிராமங்களிலும் 01.02.2023 முதல் 28.02.2023 வரை ‘கன்று வீச்சு நோய்’ தடுப்பு முகாம்’ நடைப்பெறுகிறது. 4 மாதம் முதல் 8 மாதம் வரையிலான கிடேரி கன்றுகளுக்கு மட்டும் கன்று வீச்சு நோய் தடுப்பூசி போடப்படுகிறது. இந்நோயினால் கால்நடைகளுக்கு கருச்சிதைவு, கன்று இறப்பு, சினை பிடிக்காமலிருப்பது மற்றும் இனப்பெருக்க உறுப்புகளின் புண் உண்டாக்குதல் போன்ற காரணங்களால் பெரும் பொருளாதார இழப்பை கால்நடை வளர்ப்போருக்கு ஏற்படுகிறது. எனவே, பொதுமக்கள் அனைவரும் கால்நடை பராமரிப்புத்துறை மூலமாக நடைபெறும் இம்முகாமில் தங்களது கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டு பயன் பெற வேண்டும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

### பிக் பாஷ் லீக் போட்டி:

# பிரிஸ்பேனை வீழ்த்தி 5-வது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றிய பெர்த் ஸ்கார்ச்சர்ஸ்பெர்த்




**பெர்த்,பிப்.05**

இந்தியாவில் நடைபெற்று வரும் ஐபிஎல் தொடர் போல் பல்வேறு நாடுகளி 20 ஓவர் தொடர்கள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் ஆஸ்திரேலியாவில் பிக் பாஷ் லீக் தொடர் நடைபெற்று வருகிறது. இந்த தொடர் இதுவரை 11 சீசன்கள் நடந்து முடிந்துள்ளன. இந்த தொடரின் 12வது சீசன் டிசம்பர் 13ம் தேதி தொடங்கியது. கடந்த ஒன்றரை மாதமாக நடைபெற்று வந்த இந்த தொடரின் இறுதிப்போட்டி நேற்று பெர்த்தில் நடைபெற்றது. இந்த போட்டியில் 4 முறை சாம்பியனான பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணியும், ஒரு முறை சாம்பியனான பிரிஸ்பேன் ஹீட் அணியும் மோதின. இதில் முதலில் பேட்டிங் ஆடிய பிரிஸ்பேன் ஹீட் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 175 ரன்கள் குவித்தது.

அந்த அணியில் அதிகபட்சமாக மெக்ஸ்வீனி 41 ரன்னும், ஹேஸ்ல்லெட் 34 ரன்னும் அடித்தனர். பெர்த் அணி தரப்பில் பெஹண்ட்ராப், கெல்லி தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர். இதையடுத்து 176 ரன்கள் எடுத்தாக் 5வது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றலாம் என்ற இலக்குடன் பெர்த் அணி களம் புகுந்தது. அந்த அணி 18 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 156 ரன்கள் குவித்திருந்தது.

இதையடுத்து அந்த அணியின் வெற்றிக்கு 12 பந்தில் 20 ரன் தேவைப்பட்ட போது ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இறுதியில் அந்த அணி 19.3 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 177 ரன்கள் அடித்து வெற்றி பெற்றதோடு மட்டுமின்றி 5வது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றி அசத்தியது. அந்த அணியில் கேப்டன் ஆஷ்டன் டர்னர் 53 ரன்கள் அடித்தார். இறுதியில் நிக் ஹாப்சன் 7 பந்தில் 18 ரன்களும், கூப்பர் கன்னோலி 11 பந்தில் 25 ரன்னும் எடுத்து அணியின் வெற்றியை எளிதாக்கினர்.

# இந்திய அணியின் பேட்டிங் முதுகெலும்பு ஸ்ரேயஸ் அய்யர்: அஷ்வின் பேட்டி



**நாக்பூர், பிப்.05**

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணி 4 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடுகிறது. இரு அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பிப்ரவரி 9ந் தேதி நாக்பூரில் தொடங்குகிறது.

இந்த டெஸ்ட் தொடர் இந்திய அணிக்கு மிக முக்கியமாக பார்க்கப்படுகிறது. ஏனெனில் இந்த டெஸ்ட் தொடரை இந்தியா கைப்பற்றினால் தான் இங்கிலாந்தில் நடைபெறும் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும். இந்நிலையில், இந்திய அணி ஆடுகளங்கள் சுழற்பந்து வீச்சுக்கு ஏதுவாக இருக்கும் என கணிக்கப்படுகிறது.

இந்திய அணியின் ஆடும் லெவன் அணியை தேர்ந்தெடுப்பதில் கேப்டன் ரோகித் என்ன செய்வார்? என எதிர்பார்ப்பு எகிறி உள்ளது. பேட்டிங்கில் ரோகித், கில், புஜாரா, கோலி, ஸ்ரேய்ஸ் அய்யர், சூர்யகுமார் யாதவ், இஷன் கிஷன், கே.எஸ்.பரத் என பேட்ஸ்மேன்கள் பட்டாளம் ஏராளமாக உள்ளது. இந்நிலையில் விராட் கோலி, ரோகித் சர்மா ஆகியோரை விட இந்திய அணியின் பேட்டிங்கில் முதுகெலும்பு ஸ்ரேய்ஸ் அய்யர் தான் என இந்திய கிரிக்கெட் வீரர் ரவிச்சந்திரன் அஷ்வின் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, கடந்த சில வருடங்களாக டெஸ்ட் கிரிக்கெட்டில் ரிஷப் பண்ட் உடன் அதிகப்போட்டியில் பார்ட்னர்ஷிப் அமைத்து ஆடிய வீரர் ஸ்ரேயஸ் அய்யர் தான். அப்படி இருந்துமே அவருக்கு சரியான அங்கீகாரம் கிடைக்கவில்லை என நினைக்கிறேன். இந்திய அணியின் பேட்டிங் ஆர்டரில் முதுகெலும்பாக இருந்து வருவது ஸ்ரேயஸ் அய்யர் தான். பண்ட் இல்லாத சமயத்தில் அவர்தான் தாக்கத்தை ஏற்படுத்துவார் என நினைக்கிறேன். அவருக்கு தற்போது முதுகுப்பகுதியில் காயம் ஏற்பட்டு சிகிச்சைப்பெற்று வருகிறார். எனினும் பொறுத்திருந்து பார்க்கலாம் என்பது போல அஸ்

# ரஞ்சி டிராபியில் பஞ்சாபை வீழ்த்தியது சவுராஷ்டிரா: அரையிறுதியில் கர்நாடக அணியுடன் மோதல்



**ராஜ்கோட், பிப்.05**

ரஞ்சி கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. விறுவிறுப்பாக நடந்து வரும் இந்த தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. கர்நாடகா, பெங்கால், ஆந்திரா, ஜார்கண்ட், மத்திய பிரதேசம், பஞ்சாப், உத்தரகண்ட், சவுராஷ்டிரா அணிகள் காலிறுதிக்கு முன்னேறின. இதில் காலிறுதி ஆட்டங்களில் ஜார்கண்ட்-பெங்கால், ஆந்திரா-மத்திய பிரதேசம், சவுராஷ்டிரா-பஞ்சாப், உத்தரகண்ட்-கர்நாடகா அணிகள் மோதின. இதில் ஜார்கண்டை 9 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி பெங்கால் அணியும், ஆந்திராவை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி மத்திய பிரதேசமும், உத்தரகாண்ட்டை 281 மற்றும் ஒரு இன்னிங்ஸ் வித்தியாசத்தில் வீழ்த்தி கர்நாடக அணியும் அரையிறுதிக்கு தகுதி பெற்றிருந்தன.

இந்நிலையில், ரஞ்சி கிரிக்கெட்டில் சவுராஷ்டிரா-பஞ்சாப் அணிகள் மோதும் கால்இறுதி ஆட்டம் ராஜ்கோட்டில் நடந்து வந்தது. இதில் முதல் இன்னிங்சில் சவுராஷ்டிரா 303 ரன்னும், பஞ்சாப் அணி 431 ரன்னும் சேர்த்தன. 128 ரன்கள் பின்தங்கிய சவுராஷ்டிரா 2-வது இன்னிங்சில் 379 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக பிரேராக் மன்கட் 88 ரன்கள் எடுத்தார். பஞ்சாப் அணி தரப்பில் சுழற்பந்து வீச்சாளர் வினய் சவுத்ரி 7 விக்கெட்டுகளை அள்ளினார். பின்னர் 252 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 2-வது இன்னிங்சை ஆடிய பஞ்சாப் அணி 180 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 71 ரன் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இதன் மூலம் சவுராஷ்டிரா அணி அரையிறுதிக்கு முன்னேறியது. அரையிறுதி ஆட்டங்களில் பெங்கால் - மத்திய பிரதேசம், சவுராஷ்டிரா - கர்நாடகம் அணிகள் மோதுகின்றன. அரையிறுதி ஆட்டங்கள் பிப்ரவரி 8ந் தேதி தொடங்குகின்றன.

# திருப்பதி கோவிலில் தானியங்கி எந்திரம் மூலம் லட்டு தயாரிக்க முடிவு



**திருப்பதி, பிப். 05-**

திருப்பதி கோவிலில் தானியங்கி எந்திரம் மூலம் லட்டு தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக முதன்மை செயல் அலுவலர் தெரிவித்தார்.

திருமலை திருமலையில் பக்தர்களிடம் குறைகள் கேட்கும் நிகழ்ச்சிக்குப் பிறகு முதன்மைச் செயல் அலுவலர் ஏ.வி.தர்மாரெட்டி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

திருமலையில் ரூ.120 கோடியில் புதிய தோற்றத்துடன் அதிநவீன எஸ்.வி.அருங்காட்சியகம் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள் கட்டி முடிக்கப்பட்டு பக்தர்கள் பார்வையிட அனுமதிக்கப்படுவர். உலகிலேயே நம்பர் ஒன் அருங்காட்சியமாக இது இருக்கும்.

அருங்காட்சியகத்தில் 3டி இமேஜிங் முறையில் வெங்கடாசலபதியின் தங்க நகைகள் பக்தர்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தப்படும். திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தரமான, சரியான எடையில் லட்டு பிரசாதங்களை தயாரிப்பதற்காக ரிலையன்ஸ் நிறுவனம் ரூ.50 கோடியில் தானியங்கி எந்திரத்தை காணிக்கையாக வழங்க உள்ளது. அதன் மூலம் பக்தர்களுக்கு கூடுதலாக சுகாதாரமான, சுவையான லட்டு பிரசாதங்களை தயாரித்து வழங்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

# குழந்தை திருமணங்களுடன் தொடர்பு: 2,170 பேர் அசாமில் அதிரடியாக கைது



**கவுகாத்தி, பிப். 05-**

அசாமில் முதல்வர் ஹிமாந்த பிஸ்வா சர்மாவின் உத்தரவை தொடர்ந்து குழந்தை திருமணங்களுடன் தொடர்புடைய 2,170 பேர் அதிரடியாக கைது செய்யப்பட்டு உள்ளனர்.

அசாம் மாநிலத்தில் சட்ட விரோதமாக குழந்தை திருமணங்கள் நடைபெறுவது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. குழந்தை திருமணங்களை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் அதிரடி நடவடிக்கை எடுப்பது, குற்றவாளிகளை கைது செய்வது, விரிவான வகையில் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்வது என்று கடந்த ஜனவரி 23-ம் தேதி மாநில முதல்வர் ஹிமாந்த பிஸ்வா சர்மா தலைமையில் கூடிய அமைச்சரவை முடிவு எடுத்தது.

இந்நிலையில், அசாமில் முதல்வரின் உத்தரவை தொடர்ந்து, குழந்தை திருமணங்களுடன் தொடர்புடைய 2,170 பேர் நேற்று காலை வரையில் அதிரடியாக கைது செய்யப்பட்டு உள்ளனர் என சட்டம் மற்றும் ஒழுங்கு போலீஸ் செய்தி தொடர்பாளர் பிரசந்த குமார் கூறியுள்ளார்.

குழந்தை திருமணங்கள் தொடர்பாக இதுவரை 4,074 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை இன்னும் 3 அல்லது 4 நாட்களுக்கு தொடரும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனால், கைது எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் 52 பேர் திருமண சடங்குகளை நடத்திய சாமியார்கள் மற்றும் காஜிக்கள் ஆவர் என்று டி.ஜி.பி. தெரிவித்துள்ளார். அவர்களில் பலர் தூப்ரி, பார்பேட்டா, கோக்ராஜர் மற்றும் விஸ்வநாத் மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அப்ரிடியின் மகளை மணந்தார்: பாக். வேகப்பந்து வீச்சாளர் ஷாகீன்ஷா அப்ரிடி




**கராச்சி, பிப்.05**

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீரர்களில் ஒருவர் ஷாகீன் ஷா அப்ரிடி. இவருக்கும் பாகிஸ்தான் முன்னாள் அதிரடி பேட்ஸ்மேன் சகீத் அப்ரிடியின் மகள் அன்ஷாவுக்கும் இடையே கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நிச்சயிக்கப்பட்டு இருந்தது.

ஷாகீன்ஷா-அன்ஷா திருமணம் கராச்சியில் நடந்தது. பாகிஸ்தான் கேப்டன் பாபர் அசாம், சர்பிராஸ் அகமது, நசீம் ஷா, சதாப்கான் உள்ளிட்ட கிரிக்கெட் வீரர்கள், பிரபல ஸ்குவாஸ் வீரர் ஜஹாங்கீர்கான் உள்பட பலர் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

திருமணம் தொடர்பான வீடியோக்கள், புகைபடங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலானது. பாகிஸ்தான் வீரர்களான ஹாரிஸ் ரவூப், ஷதாப் கான் ஆகியோர் கடந்த மாதம் திருமணம் செய்து கொண்டனர். அந்த வரிசையில் தற்போது ஷாகீன்ஷா அப்ரிடியும் இணைந்து கொண்டனர். ஷாகீன்ஷா அப்ரிடி 25 டெஸ்டில் விளையாடி 99 விக்கெட்டும், 32 ஒருநாள் போட்டியில் 62 விக்கெட்டும், 47 இருபது ஓவர் ஆட்டத்தில் 58 விக்கெட்டும் வீழ்த்தி உள்ளார். பாகிஸ்தான் அணிக்காக 3 வடிவிலான போட்டிகளிலும் விளையாடி வருகிறார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமை செயலகத்தில், விருதுநகர் மாவட்ட பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியாளர்களின் சங்கங்களின் பிரதிநிதிகள் சந்தித்து, தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர் நல வாரியத்திற்கு 5 கோடி ரூபாய் பங்களிப்பு நிதியினை வழங்கினர்.

# டெல்டா மாவட்ட பயிர் சேதங்களை பார்வையிட அமைச்சர்கள் குழு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, பிப். 05-**

டெல்டா பகுதி மாவட்டங்களில் பயிர் சேதங்களைப் பார்வையிட அமைச்சர்கள் குழு அனுப்பி வைக்கப்படுகிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

கடந்த சில நாட்களில் தஞ்சாவூர், திருச்சி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் பெய்த கனமழையின் காரணமாக அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர் உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் நீரில் சாய்ந்து மூழ்கியுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. இந்த பருவம் தவறி பெய்த திடீர் மழை தற்போது குறைந்து வருகிறது, மேலும் நீரினை வடியவைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது சம்பந்தமாக ஏற்கெனவே, வருவாய்த் துறை மற்றும் வேளாண்மைத் துறை அதிகாரிகள் களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர்கள் முதல்நிலை ஆய்வினை மேற்கொண்டுள்ளார்கள். மேலும், இதனை நேரடியாக ஆய்வு செய்வதற்காக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆகியோரை அனுப்பி வைத்துள்ளேன். இவர்களுடன் வேளாண்மைத் துறைச் செயலாளர் மற்றும் இயக்குநர் உள்ளிட்ட மூத்த துறை அதிகாரிகளையும் இந்தக் கள ஆய்வினை மேற்கொண்டு விவசாயிகளைச் சந்தித்துப் பேசி விபரங்களைப் பெற அறிவுறுத்தியுள்ளேன்.

வரும் திங்கட்கிழமை (6-2-2023) அன்று இந்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழுவை சந்தித்து, சேத விபரங்களை அறிந்து, மழையினால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு பயிர்காப்பீடுத் தொகை பெற்றுத் தருவது குறித்தும், இழப்பீடு வழங்குவது குறித்தும் உரிய மேல் நடவடிக்கைகள் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஏழு ஸ்வரங்களின் கான சரஸ்வதி வாணி ஜெயராம் பாடிய பாடல்கள்

**சென்னை, பிப். 05-**

தமிழ் சினிமாவில் பிரபல பின்னணி பாடகி வாணி ஜெயராம் கடந்த 1974-ம் ஆண்டு வெளியான தீர்க்க சுமங்கலி என்ற படத்தின் மூலம் திரையுலகிற்கு பாடகியாக அறிமுகமானார். பின்னர், தமிழ், தெலுங்கு, கன்னடம் உட்பட மொழிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை பாடி ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார். சமீபத்தில் இவருக்கு பத்ம பூஷண் விருது வழங்கப்பட்டது.

1971-ம் வருடப் புத்தாண்டில் வெளிவந்த குட்டி (GUDDI) என்ற இந்திப் படத்தில், வசந்த் தேசாயின் இசையில் போலே ரே பப்பி ஹரா என்ற பாடலைப் பாடி திரையுலகில் பின்னணிப் பாடகியாக அறிமுகமானார் வாணி ஜெயராம். இவரது முதல் பாடலே அமோக வரவேற்பை பெற்றதை தொடர்ந்து, இசையமைப்பாளர்களால் தேடப்படும், முன்னணி பாடகியாக உருவெடுத்தார்.

இந்தியை தொடர்ந்து, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு, குஜராத்தி, ஒடியா, பெங்காலி என 19-க்கும் மேற்பட்ட மொழி பாடல்களை பாடி பிரபலமானார். 1974-ம் ஆண்டு தமிழில் தீர்க்கசுமங்கலி படத்தில் மல்லிகை என் மன்னன் மயங்கும் என்ற,முத்தான பாடலாக அமைந்தது. தீர்க்கசுமங்கலி படத்திற்கு முன்பே, இவர், வீட்டுக்குவந்த மருமகள், சொல்லத்தான் நினைக்கிறேன் முதலான படங்களில் பாடியிருந்தாலும், தீர்க்கசுமங்கலி படமே முதலில் வந்ததால், அதில் இடம்பெற்ற இவர் பாடிய பாடலே, முதல்பாடலானது.

மாடர்ன், கர்நாடக இசை, கஜல், பாப்நாட்டுப்புறஇசை, உள்ளிட்ட பலவிதமான இசைப்பாடல்களையும் நன்றாகப் பாடக் கூடிய பாடகி வாணிஜெயராம் இந்தியாவின் முதல் 3டி படமான மைடியர் குட்டிச்சாத்தான் படத்தில் பாடிய செல்லக்குழந்தைகளே பாடலில், இசையிலும்சரி, குரலிலும் சரி, குழந்தைகளின் குதூகலஉணர்வு வழிந்தோடுவதை உணரமுடியும்.

பாலைவனச்சோலை படத்தில் இவர் பாடிய மேகமே, மேகமே! பாடல், இன்றளவும் கேட்பவர்கள் மனதை, நெகிழவைக்கக் கூடியது. புனித அந்தோனியார் படத்தில் மண்ணுலகில் இன்று தேவன் இறங்கி வருகிறார், பி. சுசீலாவுடன் இணைந்து பாத பூஜை படத்தில் கண்ணாடி அம்மா உன் இதயம், அந்தமான் காதலியில் நினைவாலே சிலை செய்து, சினிமாப் பைத்தியம் படத்தில் என் உள்ளம் அழகான வெள்ளித்திரை, தங்கப்பதக்கத்தில் தத்திச் செல்லும் முத்துக் கண்ணன் சிரிப்பு, பாலாபிஷேகத்தில் ஆலமரத்துக் கிளி எனக் கேட்டதுமே இதயத்துள் ஈரம் படச் செய்யும் குரலினிமையுடன் அவர் பாடிய பாடல்களின் பட்டியல் மிகப் பெரிது.

### ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட்:

# ஸ்ரேயஸ் அய்யர் இடத்தில் இவரை களம் இறக்குங்கள்

## தினேஷ் கார்த்திக் கருத்து



**மும்பை, பிப்.05**

4 டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகளில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலிய அணி இந்தியா வந்துள்ளது. இந்தியா - ஆஸ்திரேலியா அணிகள் மோதும் முதல் டெஸ்ட் வருகிற 9-ந்தேதி நாக்பூரில் தொடங்குகிறது. 2-வது டெஸ்ட் பிப்ரவரி 17-21 வரை டெல்லியிலும், 3-வது டெஸ்ட் மார்ச் 1 முதல் 5 வரை தர்மசாலாவிலும், 4-வது மற்றும் கடைசி டெஸ்ட் மார்ச் 9 முதல் 13 வரை அகமதாபாத்திலும் நடக்கிறது.

அதைத்தொடர்ந்து ஒரு நாள் போட்டிகள் மார்ச் 17, 19 மற்றும் 22-ந்தேதிகளில் மும்பை, விசாகப்பட்டினம், சென்னை ஆகிய இடங்களில் நடக்கிறது. டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப் பட்டியலில் ஆஸ்திரேலிய அணி முதலிடத்திலும், இந்திய அணி 2வது இடத்திலும் உள்ளது. இந்தியா இறுதி சுற்றுக்கு முன்னேற வேண்டும் என்றால் ஆஸ்திரேலியாவிடம் வெற்றி பெற்றே தீர வேண்டும்.

இதற்காக இந்திய அணி நாக்பூரிலும், ஆஸ்திரேலிய அணி பெங்களூருவிலும் பயிற்சி முகாம்களை தொடங்கிவிட்டனர். இந்த நிலையில் இந்திய வீரர்கள் இன்று பயிற்சியை தொடங்கி உள்ளனர். வீரர்கள் பயிற்சியில் ஈடுபடும் புகைப்படத்தை பிசிசிஐ வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணியில் இடம் பெற்றிருந்த மிடில் ஆர்டர் பேட்ஸ்மேன் ஸ்ரேயஸ் அய்யர் காயம் காரணமாக முதல் டெஸ்ட் போட்டியில் ஆட மாட்டார் என தகவல்கள் வெளியான வண்ணம் உள்ளன. ஆனால் இன்னும் அதிகாரப்பூர்வமாக எந்த அறிவிப்ப்ம் வெளியாகவில்லை.

இந்நிலையில், முதல் டெஸ்ட் போட்டியில் ஸ்ரேயஸ் அய்யர் ஆடவில்லை என்றால் அவருக்கு பதிலாக சூர்யகுமார் யாதவை ஆட வையுங்கள் என இந்திய கிரிக்கெட் வீரர் தினேஷ் கார்த்திக் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறும் போது, ஒருவேளை ஸ்ரேயஸ் அய்யர் உடற்தகுதியை எட்டவில்லை என்றால் அந்த இடத்திற்கு சூர்யகுமார் யாதவ் மற்றும் சுப்மன் கில் ஆகியோர் தயாராக உள்ளனர்.

என்னைபொறுத்தவரை அந்த இடத்தில் நான் சூர்யகுமார் யாதவை ஆட வைப்பேன். ஏனெனில் அவர் சுழற்பந்து வீச்சை அபாரமாக ஆட கூடிய வீரர் மற்றும் நாம் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளங்களில் விளையாட உள்ளோம். அவருக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். அவர் சிறப்பான பார்மில் உள்ளார். இவ்வாறு அவர் கூறினார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி, இராணிப்பேட்டை, தேனி, விழுப்புரம், மயிலாடுதுறை, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, விருதுநகர், பெரம்பலூர், திருவாரூர், கோயம்புத்தூர், தென்காசி ஆகிய மாவட்ட கலெக்டர்களுடன், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாடினார். அருகில் தலைமைச்செயலாளர் வெ.இறையன்பு, கூடுதல் தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், செயலாளர் டி.ஜகந்நாதன் ஆகியோர் உள்ளனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, இந்து சமய அறநிலையத்துறை சார்பில், தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான நிருவாகத்திலுள்ள 88 திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்காக அரசு மானியமாக ரூ.3 கோடிக்கான காசோலையை அரண்மனை பரம்பரை அறங்காவலர் சி.பாபாஜி ராஜா பான்ஸ்லேவிடம், முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். அருகில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச்செயலாளர் வெ.இறையன்பு ஆகியோர் உள்ளனர்.


● சென்னை தலைமைச்செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் தமிழரசு இதழின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள "இலக்கிய மலர்-2023" என்ற சிறப்பு மலரினை நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட, அதன் முதல் பிரதியை தலைமைச்செயலாளர் வெ.இறையன்பு, இரண்டாம் மற்றும் மூன்றாம் பிரதிகளை எஸ்.ராமகிருஷ்ணன் மற்றும் ஓவியர் டிராட்ஸ்கி மருது ஆகியோர் பெற்றுக்கொண்டனர். அருகில் இரா.செல்வராஜ், வீ.ப.ஜெயசீலன் ஆகியோர் உள்ளனர்.

# இலக்கிய மலர் 2023 எனும் இதழை வெளியிட்டார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, பிப்.05-

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று, செய்தி மக்கள் தொடர் புத்துறையின் தமிழரசு இதழின் சார்பில் தயா ரிக்கப்பட்டுள்ள இலக் கிய மலர் 2023 என்ற சிறப்பு மலரினை முதல் வர் மு.க.ஸ்டாலின் வெளி யிட்டார்.

அதன் முதல் பிரதியை தலைமைச் செயலாளர் இறையன்பு பெற்றுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து இரண்டாம் மற்றும் மூன் றாம் பிரதிகளை சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் எஸ்.ராம கிருஷ்ணன் மற்றும் புகழ்பெற்ற ஓவியர் டிராட்ஸ்கி மருது ஆகி யோர் பெற்றுக் கொண் டனர்.

அறிஞர்கள், இலக்கி யவாதிகள், கவிஞர்கள், விமர்சகர்கள், ஓவியர் கள் போன்றவர்களின் எழுத்தும், இலக்கியமும், அவர்களின் ஓவியங் களும், கவிதைகளும், கட்டுரைகளும், சிறு கதைகளும் எவ்வாறு படைக்கப்பட்டது என் பதை எடுத்துக்காட்டும் விதமாக இலக்கிய மலர் உருவாக்கப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

# கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 4 பெண்களின் குடும்பத்திற்கு தலா ரூ. 2 லட்சம் நிதியுதவி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, பிப். 05-

கூட்டநெரிசலில் சிக்கி உயிரிழந்த 4 பெண் களின் குடும்பத்திற்கு தலா ரூ. 2 லட்சம் முதலமைச் சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் வெளியிட்டுள்ள அறிக் கையில், திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம் மற்றும் நகர காவல் எல்லைக்குட்பட்ட பகுதியில் அய்யப்பன் என்பவர் இன்று (5.2.2023) நடைபெறும் தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு, அங்குள்ள பொதுமக் களுக்கு வேட்டி-சேலை வழங்குவதற்காக, நேற்று (4.2.2023) காலை வாணி யம்பாடி காய்கறி சந் தைக்கு அருகில் டோக் கன் விநியோகித்தார்.

அதை வாங்குவதற்காக ஏராளமான பொதுமக் கள் கூடியதால், அங்கு கூட்டநெரிசல் ஏற்பட் டது. இந்த கூட்டநெரிச லில் சிக்கி சண்முகம் என்பவரது மனைவி வள் ளியம்மாள், ஜெமினி என் பவரது மனைவி ராஜாத்தி, சின்னத்தம்பி என்பவரது மனைவி நாகம்மாள் மற் றும் மணி என்பவரது மனைவி மல்லிகா ஆகிய வயதான நான்கு பெண் கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும் மூன்று பெண் கள் வாணியம்பாடி அரசு அனுமதிக்கப்பட்டுள்ள னர். காயமுற்று, மூச்சுத் திணறல் ஏற்பட்டு, மருத் துவமனையில் இந்த சம் பவத்திற்கு காரணமான அய்யப்பன் உடனடியாக கைது செய்யப்பட்டுள் ளார்.

இந்த துயர சம்பவத் தைக் கேள்வியுற்று, நான் மிகவும் வேதனை அடைந் தேன். உயிரிழந்தவர் களை பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள் கிறேன்.

கூட்டநெரிசலில் சிக்கி உயிரிழந்த வயதான நான்கு பெண்களின் குடும்பத் தாருக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதி யிலிருந்து, தலா இரண்டு லட்சம் ரூபாயும், கடும் காயமடைந்து, மூச்சுத் திணறல் ஏற்பட்டு, மருத் துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மூன்று பெண்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதியுதவி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அந்த அறி விப்பில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள் ளார்.



● கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்க்கனவு நிகழ்ச்சியில், தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கல்லூரி மாணவியர்களிடையே உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் மு.பிரதாப், மாநில திட்டக்குழு உறுப்பினர் கு.சிவராமன், பி.எஸ்.ஜி. கல்லூரி முதல்வர் கு.பிருந்தா ஆகியோர் கலந்து கொண்டனர்.




● மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தில் தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு நேற்று, தேரோட்டம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. தெப்பத்தில் சுவாமியும், அம்பாளும் வலம் வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தனர்.

# பழனியில் தைப்பூச தேரோட்ட திருவிழா விண்ணை பிளந்த அரோகரா முழக்கம்

பழனி, பிப். 05-

பழனி தண்டாயுத பாணி சுவாமி கோவி லில் ஜனவரி மாதம் 29-ம் தேதி தைப்பூச திரு விழா தொடங்கி வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது. விழாவின் சிகர நிகழ்வான தைப்பூச தேரோட்டம் நேற்று நடை பெற்றது.

நேற்று அதிகாலை வள்ளி-தெய்வானையுடன் முத்துக்குமாரசாமி சண் முகாநதிக்கு எழுந்தருளி தீர்த்தம் கொடுத்தல் நடை பெற்றது. மதியம் சுவாமி திருத்தேரில் எழுந்தருளும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைதொடர்ந்து மாலை யில் தேரோட்டம் தொடங் கியது.

பெரியநாயகி அம்மன் கோவிலில் இருந்து புறப் பட்ட திருத்தேர் ரத வீதி யில் வலம் வந்தது. ஏரா ளமான பக்தர்கள் திருத் தேரை வடம் பிடித்து இழுத்து திருத்தேரில் வீற் றிருந்த முருகனை தரிச னம் செய்தனர்.

பக்தர்களின் அரோ கரா... அரோகரா. முழக் கம் விண்ணை பிளந்தது. தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் இருந்து பழ னிக்கு லட்சக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரை யாக வந்து தேர்த்திருவி ழாவில் பங்கேற்று முரு கனை வழிபட்டனர். பக் தர்கள் மலைக்கோவில், அடிவாரம் உள்ளிட்ட பகு திகளில் திரண்டு இருந் ததால் எங்கு திரும்பினா லும் மக்கள் தலைகளாக காட்சியளித்தது.

ஏராளமான பக்தர்கள் பால்குடம் எடுத்தும் காவடி எடுத்தும் நேர்த்திக்கடன் செலுத்தினர். பக்தர்க ளின் வசதிக்காக கிரிவல பாதையில் பல்வேறு இடங் களில் தற்காலிக குடில் கள் அமைக்கப்பட்டு இருந் தன. பக்தர்கள் பாதுகாப் புக்காக டி.ஐ.ஜி தலை மையில் 3000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடு படுத்தப்பட்டு இருந்தனர். பக்தர்கள் வரும் வாகனங் களை நிறுத்த தற்காலிக பஸ் நிலையம் ஏற்படுத் தப்பட்டு இருந்தது.

## மல்லிகை, என் மன்னன் மயங்கும் பாடல் புகழ்

# பிரபல பின்னணி பாடகி வாணி ஜெயராம் காலமானார்

சென்னை, பிப். 05-

பிரபல பின்னணி பாடகி வாணி ஜெயராம் (78) சென்னையில் நுங் கம்பாக்கத்தில் உள்ள தனது இல்லத்தில் உயி ரிழந்தார். படுக்கை அறை யில், கீழே விழுந்து நெற் றியில் அடிபட்டு உயிரி ழந்ததாக போலீசாரின் முதல் கட்ட விசாரணை யில் தெரிய வந்துள்ளது.

1945-ம் ஆண்டில் வேலூரில் பிறந்த வாணி ஜெயராமின் இயற்பெயர் கலைவாணி. வங்கி ஊழி யராக பணியாற்றிய வாணி ஜெயராம், வேலைமாற்றம் காரணமாக மும்பை சென்ற போது, அவரின் திறமையை அடையாளம் கண்டது இந்தி திரையுலகம்.

1971-ம் ஆண்டு முதல் திரையுலகில் இருந்த வாணி ஜெயராம் 10,000-க்கும் அதிகமான பாடல்களை பாடியுள்ளார். தமிழ், தெலுங்கு, கன்னடம் உட் பட 19 மொழிகளில் வாணி ஜெயராம் பாடல்களை பாடியுள்ளார். கேள்வி யின் நாயகனே, ஏழு ஸ் வரங்களுக்குள் எத்தனை பாடல் என்பவை உள் ளிட்ட பல பாடல்கள் மூலம் புகழ்பெற்றார் வாணி ஜெயராம்.

தமிழ் திரையுலகில் 1974-ம் ஆண்டு தீர்க்க சுமங்கலி என்ற படத்தின் மல்லிகை என் மன்னன் மயங்கும் என்ற பாடலை முதல் முறையாக பாடி னார். ஏழு ஸ்வரங்களின் கான சரஸ்வதி என புக ழப்படுபவர் வாணி ஜெய ராம். 1975, 1980 மற் றும் 1991- ம் ஆண்டுக ளில் சிறந்த பின்னணி பாடகிக்கான தேசிய விரு துகளை பெற்றுள்ளார். இந்தாண்டு குடியரசு தினத் தன்று ஒன்றிய அரசின் பத்மபூஷன் விருது வாணி ஜெயராமுக்கு அறிவிக் கப்பட்டது.

இந்நிலையில், அவரது வீட்டில் பணிபுரிந்து வரும் மலர்க்கொடி கூறும்போது, நான் எப்போதும் காலை 10.15 மணிக்கு வீட்டிற்கு வருவேன். அப்படித்தான் இன்றும் 10.45 மணி அள வில் வீட்டுக்கு வந்த காலிங் பெல் அடித்தேன். நான்கு, ஐந்து முறை பெல் அடித் தும் கதவை திறக்கவில் லை. அப்போது எனக்கு சந்தேகம் வந்தது. பின் னர் போன் செய்தேன் எடுக்கவில்லை.

என் கணவரிடம் தொலைபேசியில் அழைக் கச் சொன்னேன். அவ ரும் ஐந்து முறை முயற் சித்தும் தொலைபேசி அழைப்பு எடுக்கப்பட வில்லை. கீழ் வீட்டுக்கா ரரிடம் சென்னோம். பிறகு, காவல் துறையினருக்கு தகவல் கொடுத்தோம்.

உள்ளே சென்று பார்த் தபோது அவர் படுக்கை அறையில் கீழே விழுந்து கிடந்தார். அவரது நெற் றியில் அடிப்பட்டிருந்தது. நான் 10 வருடங்களாக இங்கே பணி செய்து வரு கிறேன். அவருக்கு உடல் நிலை நன்றாகத்தான் இருந் தது என்று மலர்க்கொடி தெரிவித்தார்.

மறைந்த வாணி ஜெய ராமின் தலையில் காயம் இருந்ததால் சந்தேக மர ணம் என போலீசாரால் வழக்குப் பதிவு செய்யப் பட்டது. பிறகு ஓமந்தூ ரார் மருத்துவமனையில் அவரது உடல் பிரேத பரிசோதனை செய்யப் பட்டது. அதன் பின் அவ ரது உடல் குடும்பத்தாரி டம் ஒப்படைக்கப்பட்டது. வாணி ஜெயராம் உட லுக்கு திரையுலக பிரப லங்கள் கண்ணீர் மலக அஞ்சலி செலுத்தினர்.

# இரட்டை இலை சின்னத்தில் யார் நின்றாலும் ஆதரிப்போம்

## ஓ.பி.எஸ். அறிக்கை வாசித்து வைத்திலிங்கம் பேட்டி

சென்னை, பிப். 05-

இரட்டை இலை சின் னத்தில் யார் நின்றாலும் ஆதரிப்போம் என்று வைத் திலிங்கம் தெரிவித்தார்.

ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை அ.தி.மு.க. பொதுக்குழு முடிவு செய்ய வேண்டும் என சுப்ரீம் கோர்ட் நேற்று முன் தினம் தீர்ப்பளித்திருந்தது. பொதுக்குழுவில் ஓ.பன் னீர்செல்வம், வைத்திலிங் கம், ஜே.சி.டி.பிரபாகர், மனோஜ் பாண்டியன் ஆகியோரையும் அனு மதித்து அவர்களின் கருத் துகளையும் கேட்டறிந்து, அதன் பிறகே வேட் பாளரை தேர்வு செய்ய வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப் பட்டிருந்தது.

இந்நிலையில், சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள ஓ.பன்னீர்செல்வம் இல்லத்தில் அவரது ஆதரவாளர்கள் நேற்று ஆலோசனை கூட்டத்தில் ஈடுபட்டனர். இந்த கூட் டத்திற்கு பின்னர் செய்தி யாளர்களை பண்ருட்டி ராமசந்திரன், வைத்திலிங் கம் உள்ளிட்டோர் சந் தித்தனர். அப்போது வைத் திலிங்கம் ஓ.பன்னீர்செல் வம் சார்பில் அறிக்கை ஒன்றை வாசித்தார்.

சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை பொருத்தவரை, இந்த இடைத்தேர்தலில் எந்தெந்த கோரிக்கையை மக்கள் முன்னிலையில் நாம் எடுத்து சொன்னோமோ அவற் றையெல்லாம் நிறைவேற் றும் வகையில் அமைந்துள் ளது.

எதிர்வரும் ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் அ.தி.மு.க. ஒற்றுமையு டன் போட்டியிட வேண் டும் என்றும், ஒருங்கி ணைப்பாளர் என்ற முறை யில் அதற்கு கையெழுத் திட தயார் என்றும் அறி வித்தேன். அதற்கேற்ப சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் மூலம் ஒற்றுமையாக போட் டியிடும் வாய்ப்பு ஏற்பட் டுள்ளது. ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் இரட்டை இலை சின்னம் முடக்கப் படுவதற்கு நான் காரண மாக இருக்க மாட்டேன் என்று கூறியிருந்தேன். அதேபோல், இரட்டை இலை சின்னத்தின் மூலம் அ.தி.மு.க. போட்டியிடு கிற வாய்ப்பு சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் மூலம் கிடைத்துள்ளது.

இந்த நிலையில், என் னையும், என்னைச் சார்ந் தவர்களையும் உள்ளடக்கி எங்களது கருத்துகளை கேட்ட பின்னர்தான் பொது வேட்பாளரை பொதுக்குழு தேர்ந்தெ டுக்க வேண்டுமென்ற சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு எங்களை எதிர்த்தோருக்கு சரியான பாடமாக அமைந் துள்ளது.

அ.தி.மு.க.வின் அடிப் படை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட என் னுடைய பொறுப்பு நீடிப் பதற்கு எந்தவித தடை யும் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின் மூலம் விதிக் கப்படவில்லை.

இந்த இடைத்தேர்த லைப் பொறுத்தவரை, இரட்டை இலை சின்னம் வெற்றி பெற நானும் என் னோடு அ.தி.மு.க. மீது பற்றுக் கொண்ட தொண் டர்களும் மற்றும் என் மீது நம்பிக்கைக் கொண்ட பொதுமக்களும் வெற்றி பெற பாடுபடுவோம் என்று அதில் ஓ. பன்னீர் செல் வம் கூறியிருப்பதாக வைத் திலிங்கம் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து ஈரோடு கிழக்கு தேர்த லில் இரட்டை இலை சின் னத்தில் யார் நின்றாலும் ஆதரிப்போம் என்றும், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் படிதான் இடைத்தேர்தலை சந்திக்க போகிறோம் எனவும் வைத்திலிங்கம் கூறினார்